வார இதழ்

# தேசியம்

www.thesiyamnews.com


THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING

WELLA வெலா சலூன்

Ladies & Gents

FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.

Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர் - 02 | இதழ் - 28 | 26.09.2024 - 03.10.2024 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | ஊக்குவிப்பு : ரூ.80.00



## தமிழர் தேசத்தில் மலரப்போகும் திலீபனியம்!

பக்கம் 06



## இடதுசாரிகள் கைகளில் இலங்கை!

பக்கம் 02




பக்கம் 05

## காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்: விடை தெரியா வினாவா?

பக்கம் 04

## விடத்தல் தீவு கடல்வளத்தை கெடுக்கும் இறால் பண்ணை






## மன்னம்பெரிக்கு ஓர் நீதி! இசைப்பிரியாவுக்கு அநுரவின் அரசு நீதி வழங்குமா?

பக்கம் 11

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## மாற்றங்கள் நிரந்தரமானவையா?

தேசிய மக்கள் சக்தி நாட்டைக் கைப்பற்றிவிட்டது. மாற்றங்கள் நிகழத் தொடங்கிவிட்டன. அவசர அவசரமாக நடைபெறும் மாற்றங்கள் பலருக்கு வயிற்றில் புளியைக் கரைத்துக் கொண்டிருக்கிறது. நாம் நினைத்ததென்னவோ நடைபெற்றவை, நடைபெற்றுக்கொண்டிருப்பவை என்னவோ என்கிற சிந்தனைதான் இப்போது எல்லோர் மனங்களிலும் இருக்கிறது.

மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதே ஜனநாயகமாக இருந்தாலும் அந்த ஜனநாயகத்தினை அரசியல்வாதிகள் கடைப்பிடிக்கிறார்களா என்ற கேள்வி கடந்தகாலங்களில் இருந்து கொண்டேயிருந்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட மக்களின் விருப்பை பெற்ற ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கும் அனுர குமார திசாநாயக்க இலங்கை மக்களிடமிருந்து மாபெரும் ஆணையைப் பெற்றவராகக் கொள்ளப்படுகிறார். அது கடந்த தேர்தல்களில் ஆகக்குறைந்த விகிதாசார வாக்கினைப் பெற்றிருந்த தேசிய மக்கள் சக்தி நாட்டின் அதிகாரத்தினைக் கைப்பற்றியிருப்பது நாட்டில் அடிப்படைவாத அரசியலை மேற்கொண்டுவந்த அனைத்து அரசியல் தரப்பினருக்கும் ஒரு பேரிடியாகும்.

இலங்கை நாடானது வரலாறு முழுவதும் பல சவால்களைச் சந்தித்தே வந்தது. அது அடிப்படைவாத அரசியல்வாதிகளினதும் கட்சிகளினதும் கொள்கைகளின் பலனானதே. இருந்தாலும், மக்களின் நம்பிக்கையையும் விசுவாசமும் நாடு வீழ்ந்துபோகாத நிலையை அடைவதந்கான முயற்சியாக நடைபெற்றிருக்கும் மாற்றத்தைப் பார்க்கப்படவேண்டும்.

நாடு முன்னோக்கி செல்லும் பாதை நீண்ட மற்றும் வலிமையானதாக இருக்கும், ஆனால் சவால்களை வெல்லவேண்டியதாகவும் இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஜனாதிபதி பதவியேற்று வெறும் மூன்றுபேரைக் கொண்ட அமைச்சரவை அமைக்கப்பட்டதையடுத்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கிறது, அடுத்த தேர்தலை நோக்கியே அனைத்துக் கட்சிகளும் முனைப்பினை ஆரம்பித்திருக் கின்றன. ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருந்துவந்த அனைத்து வரப்பிரசாதங்களும் இல்லாமலாக்கப்படும் என்ற ஒரு சூழ்நிலையில் கடந்தகால பாராளுமன்ற நடைமுறைகள் வரப்பிரசாதங்கள் இல்லாது யாரெல்லாம் அதற்காக முயற்சிஎடுப்பார்கள் என்பது இந்த இடத்தில் கேள்வியாக இருக்கிறது.

நடைபெற்றுவரும் மாற்றங்கள் புதிய தொடக்கத்தின் படிநிலைகளாகக் கொள்ளப்பட்டு நாட்டை முன்னேற்றகரமானதானதொரு நிலைக்கு கொண்டு செல்வது முக்கியமானதே. ஆனால், நாட்டை ஒரு பொதுவான அடையாளத்தின் கீழ் ஒன்றிணைப்பதும் முக்கியமானது. பொன்னான வாய்ப்புகளை வீணாக்கிய வரலாறுகள் பல நம் நாட்டின் அரசியல் வரலாற்றில் இருக்கின்றன. இந்த வரலாறுகளுடன் இனிவரும் வரலாறும் சேராதிருப்பதற்காக அனைவரும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு, எரிபொருள் வரிசைகள், மின்வெட்டு, குழப்பமான உள்நாட்டுக் கலவரம், வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி என இருந்த நாடு தேசியப்பட்டியல் மூலமாக பாராளுமன்றத்துக்குள் வருகைதந்த ரணில் விக்கிரமசிங்கவால் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டது. எதற்கும் பழக்கப்பட்டுக் கொள்ளும் மனோநிலை மனிதனுடையது என்பதனாலே அது சாத்தியமானது என்பதும் உண்மை.

யாரும் எதிர்பார்க்காத வகையில் மிகவும் அமைதியான தேர்தல் ஒன்று நடைபெற்றது. தமிழ்ப் பொது வேட்பாளரும் இத்தேர்தலில் களமிறக்கப்பட்டார். இது பல அரசியல் காரணங்களால் விமர்சிக்கப்பட்டாலும் நல்ல முயற்சியாகவே பொதுப்படையாக தமிழர்களால் பார்க்கப்பட்டிருக்கிறது, புதிய ஜனாதிபதியின் முன் உள்ள சவாலான விடயங்களில் தமிழர்களுடைய இனமுரண்பாட்டுச் சிக்கலை முடித்துவைப்பதும் இருக்கின்றது என்றவகையில் நிரந்தரமான ஒரு மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்ப்போம்.

அடிப்படையான மிகச்சாதாரணமான பிரச்சினைகள் பூதாகாரமாகி புரையோடிப்போன இனப்பிரச்சினையாக மாற்றம்பெற்றன. அவற்றின் அடிப் படையான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன்மூலமே வட கிழக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியும்.

நடைபெறுபவைகள் அரசியல் பிளவுகள், அதிகாரப்போட்டிகள் இல்லாத மனிதாபிமான மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான மாற்றங்கள் அமைந் திருக்கட்டும்.

புதிய ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க பொருளாதாரத்தை புத்துயிர் பெறச்செய்து, நாட்டின் குடிமக்களுக்கு நன்மை பயக்கும் முக்கிய சமூக, பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளை வழங்குவார் என்று நம்புவோம். அத்தோடு வட கிழக்கு மக்களின் நலனும் கவனிப்பதாக இருக்கட்டும்.

# இடதுசாரிகள் கைகளில் இலங்கை!

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுர



5,740,179



4,530,902

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

2024 தேர்தல் முடிவுகளுக்கு அமைய முதலாம் கட்ட வாக்கு எண்ணிக்கையில் அநுர குமார திஸாநாயக்க 5,634,915 (42.31%) வாக்குகளையும், சஜித் பிரேமதாச 4,363,035 (32.76%) வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர்.

இதற்கமைய, அநுர குமார திஸாநாயக்க வாக்கு எண்ணிக்கையில் வெற்றி பெற்ற போதும் 50 சதவீத வாக்கினைப் பெறாத காரணத்தினால் இரண்டாம் கட்ட விருப்பு வாக்கு எண்ணிக்கைக்கு அமைய சஜித் பிரேமதாஸ 167,867 விருப்பு வாக்குகளையும், அநுர குமார திஸாநாயக்க 105,264 விருப்பு வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர்.

இதற்கமைய, மொத்த வாக்குகளாக அநுர குமார திஸாநாயக்க 5,740, 179 வாக்குகளைப் பெற்று இந்நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார். இவரை எதிர்த்துப் போட் டியிட்ட சஜித் பிரேமதாஸ மொத்தமாக 4,530 902 வாக்குகளைப் பெற்றுக் கொண்டமை குறிப் பிடத்தக்கது.

**அநுர கடந்து வந்த பாதை...**

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திஸாநாயக்க 1968ஆம் ஆண்டு 11 மாதம் 24ஆம் திகதி கலேவெலவில் பிறந்தார்.

நான்கு வருடங்களுக்குப் பின் கெக்கிராவையில் குடியேறிய அநுர குமார திஸாநாயக்க ஆரம்பக் கல்வியை தம்புத்தேகம காமினி வித்தியாலயத்தில் பயின்றார்.

உயர்கல்வி - தம்புத்தேகம மத்திய கல்லூரி.

குறித்த பாடசாலையிலிருந்து உயர்தரத்தில் சித்தியடைந்து பல் கலைக்கழகத்துக்குத் தெரி வான முதல் மாணவர் இவராவார். 1992 இல் களனிப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான இவர் 1995இல் பட்டதாரியானார். அரசியல் வாழ்க்கை!

- 1997இல் சோஷலிச இளைஞர் அமைப்பின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.
- 1997இல் ஜே.வி.பியின் மத்திய செயற்குழு உறுப்பினராகவும், 1998 இல் ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினராகவும் நியமிக் கப்பட்டார்.
- 1998 இல் மத்திய மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட் பாளராகப் போட்டியிட்டார்.
- 2000இல் தேசியப் பட்டியல் மூலம் பாராளு மன்றத்துக்குத் தெரிவா னார் .
- 2004இல் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளுடன் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். கூட்டணி அரசாங்கத்தில் விவசாய அமைச்சர் பதவியை யும் வகித்தார்.
- 2008இல் ஜே.வி.பியின் பாராளுமன்றக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- 2010இல் தேசியப்பட்டியல் ஊடாக பாராளு மன்றத்துக்கு...
- 2014 ஜனவரி 2ஆம் திகதி ஜே.வி.பியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.
  அவர் பதவியேற்ற பின்னர் மாகாண சபைத் தேர்தலில் ஜே.வி.பியின் வாக்கு வங்கி அதிகரித்தது.
- 2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவாக வும் செயற்பட்டார்.
- 2019 ஒகஸ்ட் 18ஆம் திகதி தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராகப் பெயரிடப் பட்டார்.
- 1982ஆம் ஆண்டு நடந்த முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி சார்பில் அதன் நிறுவுநரான றோகண விஜேவீர போட்டியிட்டு, 273,428 வாக்குகளைப் பெற்றிருந்தார்.
- அதன் பின்னர், 1999 ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி சார்பில் நந்தன குணதிலக போட்டி யிட்டு, 344,173 வாக்குகளைப் பெற்றிருந்தார். (தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கின்றார்.)
- 2010இல் பொது வேட்பாளராகக் களமிறங்கிய பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கியது.
- 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவில்லை. எனினும், மகிந்த ராஜபக் ஷவுக்கு வாக்களிக்கக்கூடாது எனப் பிரசாரம் முன்னெடுத்தது.

மேலும் அநுர குமார திஸாநாயக்க தேர்தல் மேடைகளில் கூறியது போல் பல அதிரடி மாற்றங்களை செய்வதற்கு ஆரம்பித்திருக்கின்றார் இந்த நடவடிக்கைகளில் எவ்வளவு தூரம் வெற்றி கொள்வார் என்று நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அதேசமயம் இலங்கை பாராளு மன்றத்தை கலைத்து புதிய தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பையும் வெளியிட்டிருக்கின்றார்.

**- நமது நிருபர்**

# ஜனநாயக ரீதியான மாற்றம்




**'இவ்வளவு காலமும் எத்தனையோ பேருக்கு வாக்களித்து ஏமாந்திருக்கிறோம். கடைசியில் இன்றைய வங்குரோத்து நிலைதான் எமக்கு எஞ்சியிருக்கின்றது' என்ற ஆதங்கமே இந்தப் பேச்சுக்களில் தொனிக்கிறது. அதனையே அதாவது - 'இந்தத் தடவை திசைகாட்டிக்கு' என்று மக்கள் சொல்வதையே - ஜேவிபி / என்பிபி அணி தனது பிரச்சார சுலோகமாக பயன்படுத்தியது. இதுவே இன்றைய வெற்றிக்கும் ஆணி வேராக இருந்தது.**



சஜனிகா சிறீகாந்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நம்மில் யார் விரும்புகின்றோமோ இல்லையோ, நமது நாட்டில் புதிய தொரு அரசியல் சக்தி விஸ்வரூபம் எடுத்திருக் கின்றது. தேசிய அரசிய லில் தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக 'தேசிய மக்கள் சக்தி' வளர்ந்திருக்கின்றது. இந்த சக்தியை விடுத்து எதிர்காலத்தில் இலங்கையின் அரசியலை நாம் யாருமே பேச முடியாது.

1971 மற்றும் 1988, 89களில் இரண்டு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சிகள் மூலம் ஆட்சியை கவிழ்த்து, புதியதொரு புரட்சிகர ஆட்சியை ஏற்படுத்த முனைந்து படுதோல்வி கண்ட 'மக்கள் விடுதலை முன்னணியின்' புதிய வடிவமே இந்த புதிய சக்தி.

ஜனநாயக நீரோட்டத்தினுள் வந்த அவர்கள், பல ஏற்றத் தாழ்வுகளை இதுவரை இலங்கை அரசியலில் கண்டு வந்தனர். ஆனால், 2022இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளால் ஏற்பட்ட அமைதியான மக்கள் புரட்சி என்பது, இவர்களுக்கு பாரியதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுத்தது எனலாம்.

வரலாற்றில் முதல் தடவையாக இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் மறக்கப்பட்டு மக்கள் ஒன்றாக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். குறிப்பாக, இளைஞர்களும் யுவதிகளும் இந்தக் கிளர்ச்சியில் காட்டிய ஆர்வத்தினை சரியான முதலீடாகப் பயன்படுத்தியது இந்த புதிய சக்தி.

கடந்தகால தேர்தல்களில் 3-4% வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்த ஒரு கட்சி, இரண்டு ஆண்டுகளில் இவ்வாறு அசுர வளர்ச்சி பெற அடிகோலிய காரணிகளில் இந்த மக்கள் கிளர்ச்சியானது, விஷேட பங்காற்றியதை யாரும் மறுக்க முடியாது.

இனவாதத்தினால் மிகவும் பயங்கரமாக பாதிக்கப்பட்டிருந்த சிறுபான்மை சமூகங்க ளின் இளம் வயதினர் இதனால் மிகவும் கவரப்பட்டுள்ளனர். கடந்தகால ஊழல் நிறைந்த ஆட்சிகள், இலஞ்சம், அதிகார துஷ்பிரயோகம், வீண்விரயம் காலதாமதம், விலைவாசி கூடியமை, வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை, வறுமை, வேலையின்மை, அதிகரித்த வருமான இடைவெளி, தொடர் ஏமாற்றம், விரக்தி, சமூக வலைத்தளங் களின் பாவனை என பல பின்னணிக் காரணிகள் இந்த மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் இக்கட்சியின் வேட்பாளர் வென்று விடுவாரோ என ஏனைய வேட்பாளர்கள் அஞ்சுமளவிற்கு இந்த வளர்ச்சியானது காணப்பட்டது.

சிலவேளைகளில் இந்தக் கட்சியின் வேட்பாளர் தோல்வி கண்டிருந்தால், தொடர்ந்து வரும் பொதுத்தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியாக அவர்கள் அமர நிறையவே சந்தர்ப்பமும் காணப்பட்டது. மறுபுறமாக, ஜனாதிபதித் தேர்தலில் வென்றால், சந்தேகமின்றி பாராளுமன்ற தேர்தலிலும் அவர்களே வெல்லுவார்கள் எனலாம்.

எது எப்படியோ, ஒரு தவிர்க்க முடியாத அரசியல் சக்தியாக அவர்கள் வளர்ந்து விட்டார்கள். அவர்களை வளர்த்து விட்ட பெருமையில் பெரும் பங்கு, 2005 தொடக்கம் 2022 வரை ஆட்சியில் இருந்தவர்களுக்கு உண்டு எனலாம். காரணம் ஊழல் உச்சம் தொட்ட காலமாக இந்தக் காலப்பகுதிதான் இருந்தது என்பதுதான் உண்மை.

மாற்றம் ஏற்படும் என மக்கள் எண்ணுகின்றனர். அது ஏற்படாவிட்டால் கூட, மக்கள் கவலைப்படும் நிலையில் இல்லை. காரணம் இழப்பதற்கு இனி என்னதான் இருக்கிறது என நினைக்கிறார்கள் அவர்கள்.

ஆனால், இத்தனை போராட்டங்கள், இழப்புகள், வலிகள் என அத்தனையையும் அனுபவித்த பின்னர் அதிகாரம் கைகளுக்கு கிடைத்தால், அதனை இலகுவில் அவர்கள் கைவிட மாட்டார்கள் என அவர்களின் ஆதரவாளர்கள் ஆழமாக நம்புகின்றனர்.

நாட்டையும் மக்களையும் திருப்திப்படுத்த எதனையும் அவர்கள் செய்வார்கள். தோட்டாக்களினால் (**Bullet**) அடைய முடியாததை அவர்கள் வாக்குச் சீட்டுகளினால் (**Ballot**) அடையும் காலம் கனிந்து வந்துவிட்டது.

முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இந்த தேர்தல் முற்றிலும் வேறுபட்ட ஓர் இயல்பை கொண்டே நடந்து முடிந்து இருக்கின்றது .

தேர்தல்களில் இதுவரையில் 5%க்கு குறைவான வாக்குகளை மட்டுமே பெற்று வந்த ஒரு விளிம்பு நிலைக் கட்சி ஒரு முதன்மை போட்டியாளராக எழுச்சியடைந்து வெற்றி கண்டிருப்பது வரலாற்றில் பதிவு செய்யபட வேண்டிய ஒரு விடயம் ஆகும். 1990கள் தொடக்கம் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களின் போது சிங்கள சமூகத்தின் கொடிய எதிரிகளாக கட்டமைக்கப்பட்டு வந்த தமிழ் பிரிவினைவாதம், டயஸ்போரா சமூகம் மற்றும் 2019இல் முன்வைக்கப்பட்ட இஸ்லாமிய தீவிரவாதம் போன்ற கோஷங்கள் பிரச்சார மேடைகளிலிருந்து தலைமறைவாகியிருப்பது. அடுத்த விசேஷம். அதாவது, கடந்த 20 ஆண்டுகளில் வெளிப்படையாக இனவாதம் பேசப்படாமல் நடந்து முடிந்த முதலாவது தேர்தல் இது.

சிங்கள மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் (**Sinhala Heartland**) தெளிவாகவே ஒரு ஜேவிபி / என்பிபி ஆதரவு அலை நிலவி வருவதை அவதானிக்க முடிந்தது. ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வெவ்வேறு தரப்புக்களால் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புக்கள் மீண்டும் மீண்டும் இதனை ஊர்ஜிதம் செய்திருக்கின்றன. அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அணி மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கும் அரசியல் ஆய்வாளர்களும் கூட 'ஆம் அவர்களுக்கு ஒரு ஆதரவு அலை இருந்து வருகிறது அதை மறுக்க முடியாது' என்ற பீடிகையுடனேயே தமது கருத்துக்களை முன்வைத்து இருந்தனர்.

'அநுர குமாரவே எங்கள் தெரிவு' என்று சொல்லும் பலர் அதற்கு முன்வைத்த காரணம் 'ஒரு தடவை அவர்களுக்கும் கொடுத்துப் பார்ப்போமே' என்பது. அதாவது, 'இவ்வளவு காலமும் எத்தனையோ பேருக்கு வாக்களித்து ஏமாந்திருக்கிறோம். கடைசியில் இன்றைய வங்குரோத்து நிலைதான் எமக்கு எஞ்சியிருக்கின்றது' என்ற ஆதங்கமே இந்தப் பேச்சுக்களில் தொனிக்கிறது. அதனையே அதாவது - 'இந்தத் தடவை திசைகாட்டிக்கு' என்று மக்கள் சொல்வதையே - ஜேவிபி / என்பிபி அணி தனது பிரச்சார சுலோகமாக பயன்படுத்தியது. இதுவே இன்றைய வெற்றிக்கும் ஆணி வேராக இருந்தது.


2022 பொருளாதார நெருக்கடியின் போது எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடுகள் போன்ற பிரச்சினைகள் அவர்கள் இதுவரையில் அனுபவித்து வந்த **'Comfort Zone'** இலிருந்து அவர்களை வெளியில் எடுத்து வந்தன. அந்த நிலையில், ராஜபக்சகளை ஆதரித்த அதே அளவு தீவிரத்துடன் அவர்களை எதிர்க்கவும் தொடங்கினார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் 2019இல் கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கிய படித்த சிங்கள நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்கள் பல இலட்சக் கணக்கில் இப்பொழுது திசைகாட்டியின் பக்கம் வந்து இருக்கின்றனர்.

(வெற்றியின் பின்னர் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் என்னவாக இருந்து வந்த போதிலும்) ஜனாதிபதி தேர்தலில் அநுர குமாரதிசாநாயக்கவின் வெற்றி சுதந்திரத்திற்கு பிற்பட்ட இலங்கை அரசியலில் ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய மாற்றமாக (**Paradigm Shift**) வரலாற்றில் பதிவு செய்யப்படும். மறுபுறத்தில், ஜேவிபி / என்பிபி வேட்பாளர் தோல்வி அடைந்து இருந்தால் கூட, அதனை அந்த அணி எதிர்கொண்ட ஒரு பின்னடைவாக கருத வேண்டியதில்லை. ஏனென்றால், வாக்கு களின் அடிப்படையில் அது நிச்சயமாக நாட்டின் ஒரு முக்கிய அரசியல் கட்சியாக எழுச்சியடைந்து இருக்கிறது. இந்த மாற்றமும் இலங்கை அரசியலுக்கு இதுவரை யில் இல்லாத ஒரு புதிய இயங்கி யலை (**Dynamics**) எடுத்து வர முடியும்.

தேசியம்

# விடத்தல் தீவு கடல்வளத்தை கெடுக்கும் இறால் பண்ணை



திருச்செல்வம் ஜனனி
ஊடகக்கற்கைகள் துறை
மூன்றாம் வருடமாணவி
யாழ். பல்கலைக்கழகம்.



இலங்கையின் வட மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் முக்கிய கரையோர கிராமங்களில் விடத்தல் தீவு ஒன்றாகும். இங்கு வாழும் மக்களின் ஜீவனோபாய தொழில்களில் முக்கியமானது மீன்பிடியாகும். இயற்கை மனிதர்களுக்கு அளித்த கொடைகளில் ஒன்று கடல் வளமாகும் இவை ஒரு நாட்டிற்கு பொருளாதார ரீதியில் பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது

விடத்தில் தீவு மக்கள் கடந்த 2019 ஆம் ஆண்டு கண்டல்தாவரங்கள் அழிக்கப்படுவது தொடர்பாக பல போராட்டங்கள் செய்த போதிலும் அடுத்த பிரச்சினையாக செயற்கை இறால் வளர்ப்பு பண்ணை செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பண்ணையை *Taprobane* கடலுணவு நிறுவனம் விடத்தல் தீவு இயற்கை காப்பகத்தின் ஓரத்தில் நிறுவியுள்ளது. மன்னார் பூநகரி A32 வீதியில் ஒரு கரையில் இறால் பண்ணையும் வீதியின் மறுகரையில் விடத்தல் தீவு இயற்கை காப்பக வலயமும் அமைந்துள்ளது. இந்நிறுவனமானது ஊளுசு எனப்படுகின்ற நிறுவன சமூகப் பொறுப்புணர்வு தரச் சான்றிதழை பெற்றுக்கொண்டு இலங்கையின் BAP என்கின்ற சிறந்த மீன் வளர்ப்பு முறைமை தரச் சான்றிதழையும் கொண்ட ஒரே நிறுவனமாக காணப்படுகின்றது

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி இறால் பண்ணையிலிருந்து பெருமளவிலான கரியநிறக் கழிவுநீர் A32 வீதியில் உள்ள கால்வாயில் ஊடாக விடத்தல்த்தீவு இயற்கை காப்பகத்தில் உள்ள ஓடைக்குள் வெளியேற்றப்பட்டுள்ளது. இச்சட்ட விரோதமான நடைமுறையானது இயற்கை சுற்றுப்புறச் சூழலுக்கு பேரழிவாகும். இவ் ஓடையானது கடல் நீருடன் கலக்கும் பட்சத்தில் கடல் வாழ் உயிரினங்களின் சூழல் சமநிலை பாதிக்கப்படுவதோடு இவை அவைகளின் வாழ்விடங்களையும் இனப் பெருக்கத்தை அழிப்பதோடு அப்பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரங்களினையும் கேள்விக்குறியாக்குகின்றது.

இக்கழிவுநீரின் நச்சுத்தன்மையானது பாரிய கண்டல் தாவரங்களினை அழிவுக்கு காரணமாக அமையும். இதனால் புவி வெப்பமடைவதோடு நிலம் திறந்த வெளியாவதோடு கடலரிப்பு மண்ணரிப்பு போன்றவை ஏற்படும். செயற்கை உற்பத்தி இறால் வளர்ப்புக்கு கடல் நீரானது தேவைப்படுகின்றது. அவ்வாறு அந்த நீரினை எடுக்கும் போது கோடிக்கணக்கான மீன் முட்டைகள் அழிக்கப்படுகிறது. இதனால் மீன்களின் இனப்பெருக்கம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது இது மட்டுமன்றி இறால் பண்ணைகளில் உவநீர் தேக்கம் காரணமாக சுற்றுவட்டத்தில் நன்னீர் உப்பானது அருகில் உள்ள விவசாய நிலங்கள் அனைத்தையும் பாதிக்கின்றது.

குறித்த விடயம் தொடர்பாக அக்கிராமவாசியான மீனவர் சங்கத்தலைவர் பொன்ராசா றொபட்பாலசிங்கம் (ராஜன்) அவரினை நேர்காணல் செய்த போது,

விடத்தல்தீவு என்பது கடலால் சூழப்பட்ட பிரதேசம் இது பூகோளரீதியில் பெறுமதியான பிரதேசம் பருவகாலத்தில் மீன்இனங்கள் அந்த பிரதேசத்தில் இனப்பெருக்கம் செய்து ஆழ்கடலுக்கு செல்கின்றன. தற்போது விடத்தல்தீவு இயற்கைக் காப்பகத்திற்கு உரிய 400 ஏக்கர் நிலப்பரப்பை கைத்தொழில் மீன் வளர்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கில் அகற்ற இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இலங்கையில் மிகப்பெரிய மீன் உற்பத்தி வங்கி இந்த திணைக்களங்களினால் மீன் உற்பத்திற்காக எமது மக்களின் வாழ்வாதாரத்திற்கும் அபிவிருத்திக்கும் பயன்படுத் துவதாகக் கூறி மிகப் பலம் பொருந்திய பல்தேசிய கம்பெனிகள் மக்களை பினாமியாக வைத்து விற்பனை செய்வதற்கான மறை முகமான திட்டம் நடைபெறுகிறது.





இறால் பெருக்கத்தினை அதிகரிப்பதற்காக இரசாயன மருந்துகள் பாவிக்கப்படுகின்றது இவை இறால் பண்ணைகளுக்கு அருகில் வாழ்பவர்களின் வாழ்க்கைச் சூழலிலும், சமூக பொருளாதார நிலைகளிலும் பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றன. இறால் வளர்ப்பில், உரங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்து நீர் மாசு அடைந்துவிடும் இவ்வாறு மாசுபட்ட நீர் கழிமுகங்களிலும், கடல் வாய்கால்களிலும் வெளியேற்றப்படும் போது கடலில் சென்று சேர்ந்துவிடும். இதனால் கடலில் இறால் வளர்வது கடுமையாக பாதிக்கப்படுவதுடன் மீன்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதால் மீன் உற்பத்தி மிகப்பெரிய அளவில் குறைந்துவிடும். இதனால் மீனவர் சமுதாய வாழ்க்கை பாதிக்கப்படும்


விடத்தல் தீவு
மீனவர்சங்கத்தலைவர்
ராஜன்

இறால் பண்ணைகளுக்கு அருகில் உள்ள விவசாய நிலங்களில் மண்ணும், நீரும் உவர் தன்மை பெற்று விடுவதால் உற்பத்தி பாதிக்கப்பட்டு குறைந்து விடுகிறது என்று விவசாய நிலச்சொந்தக்காரர்கள் கூறுகின்றனர். கடற்கரை ஓரம் மண்ணுக்கு கீழே உள்ள நீரை பம்ப் செய்வதால், உள் நிலப்பரப்பில் கடல் நீர் புகுந்து விடுவதால், உவர்தன்மை அதிகரிக்கின்றது. காலம்காலமாக விவசாயத்திற்கு பயன்பட்டு வந்த நிலங்களை இனிமேல் கைவிட வேண்டியதுதான். போதிய நீர்ப்பாசன வசதி இன்மையால், விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு வேறு ஏதாவது உபயோகம் கிட்டுமா என்று சிந்திக்கும் நிலையாகிவிட்டது.

மேலும் இலங்கையின் வடமேல் மாகாணத்தில் 1990களின் தொடக்க ஆண்டுகளில் இறால் உற்பத்தியில் விரைவான விரிவாக்கம் ஏற்பட்டது. புத்தளம் களப்பு முதல் அனவிலுந்தாவ சரணாலயம் வரையில் மேற்கொள்ளப்பட்ட மீன்வளர்ப்பு முயற்சிகளால் சுற்றுச்சூழல் சீர்கேடு, மாசுபாடு மற்றும் கடல் வளங்கள் அழிந்து போனமை உறுதிப்படுத்தபட்டுள்ளன. இந்தப் பின்புலத்தில் விடத்தல்தீவில் மேற்கொள்ளப்படவிருக்கும் நவீன மீன்பிடி மற்றும் இறால் வளர்ப்பு நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் கவலைகளைக் கணிப்பிலெடுக்காதவையாக உள்ளன. இவை, குறித்த பகுதியின் சுற்றுச்சூழல் கட்டமைப்பை நம்பியிருக்கும் சமூகங்களின் வாழ்வாதாரத்தை மீறுகின்றன பாரம்பரிய மீன்பிடி நடைமுறைகளைச் சீர்குலைக்கின்றன மற்றும் கடல் வளங்களின் நீண்டகால நிலைத்தன்மையைப் பாதிக்கின்றன. விடத்தல் தீவில் உருவாக்கப்படவுள்ள இறால் பண்ணைகளில் பயிரிடப்படும் இறால் இனங்கள் பற்றிய அச்சமும் வெளியிடப்பட்டுள்ளது. இங்கு பசிபிக் வெள்ளை இறால் *(Litopenaeus vannamei)* எனப்படும், இந்த இந்தியப் பெருங்கடல் தீவிற்குச் சொந்தமில்லாத இனமொன்றை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அப்பகுதியின் பூர்வீக இனங்களுக்கு ஏற்படக் கூடிய தாக்கத்தை மதிப்பிடாமல் அந்நிய இனங்களை அறிமுகப்படுத்துவது, சுற்றுச்சூழல் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்தும். வளர்க்கப்படும் இறால்களில் சில, குறிப்பாக அவற்றின் நுண்ணிய இளம் பருவத்தின் போது, இயற்கையான வாழ்விடங்களுக்கு வெளியேறும். காடுகளில், அவை ஒரு ஆக்கிரமிப்பு இனமாக மாறக்கூடும். அவை அங்குள்ள பூர்வீக இனங்களை அச்சுறுத்தும். அதேவேளை பசிபிக் வெள்ளை இறால் இலகுவில் நோய்களைக் காவும் ஒன்றாகவும் உள்ளது.

கடலோர நிலங்களில் உவர் தன்மை ஏற்பட பூகோள, தட்பவெப்ப மற்றும் நீர்நிலைக் காரணங்கள் உள்ளன. இறால் பண்ணைகள் இல்லாவிட்டால் கூட, கடலோர நிலப்பகுதி முழுதும் நிலத்தடி நீர் உவர் தன்மை கொண்டதாகவே உள்ளது. எனவே இறால் வளர்ப்பு மூலம் ஏற்கெனவே உவர்தன்மை கொண்ட நிலத்தடி நீரை மேலும் மாசுபடுத்துவது இல்லை அது முற்றிலும் தவறான விடயமே.

எங்கெல்லாம் வர்த்தக ரீதியாக இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றதோ, அங்கே, பல்வேறு காரணங்களுக்காக அதைத் தொடர்ந்து நீடிக்க முடியாமல் போய் விடுகின்றது. சுற்றுச்சூழல் சீரழிவு, மாசுபடுதல் மற்றும் நோய்கள் அவற்றுள் சில காரணங்கள். சீரழிந்த குட்டைகளை வேறு உபயோகத்திற்கு பயன்படுத்த முடியாது. இப்படி நாமே கவனிக்காமல் விட்டால் எமது கடல்வளம் மலடாகிவிடும்.

இவை யாவற்றிற்கும் அடிப்படைக் கார ணம் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப் பதற்கு அரசாங்கம் கைகொடுக்காமையே ஆகும். அதாவது பண்ணைகளை ஆற்றுப் பள்ளத்தாக்கிலே கழிவுப் பொருட்கள் அண்டிய அதிக காணப்படுகின்றன. அவற்றை முறையாக பராமரித்து (சேற்றினை) அகற்றி ஆற்றுநீரின் மட்டத்தை உயர்த்த வேண்டிய தேவை யுள்ளது. ஆற்றில் அதிக களிமண் மேலெழுவதற்கான என்பதால் நிலத்தடிநீர் சாத்தியக்கூறுகள் அரிதாகவே காணப் படுகின்றது.

இதனால் நீர் மாசடைதல் காரணமாக தரமான இறால் வளர்ப்பினை மேற்கொள்ள முடியாது உள்ளது. பல முறை அரசாங் கத்திடம் முறையிட்டும் ஒரு தகவலும் இறுதிவரை கிடைக்கவில்லை.

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்: விடை தெரியா வினாவா?




ச.அபிசரண்
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தமிழில் பழமொழி ஒன்று உண்டு காலைச் சுற்றிய நஞ்சு பாம்பு விடாது என்பார்கள் இலங்கைத்தீவில் யார் ஆட்சிக் கதிரைக்கு வந்தாலும், இந்த நஞ்சு பாம்புபோல ஆட்சியாளர்களை விடாது துரத்திக்கொண்டிருக்கும் விவகாரம் ஒன்று உண்டு அதுதான், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்! உணவும் - மருந்தும்கூட ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட தமிழ் இனவழிப்பு போரில், ஜனநாயக முறைமையை அல்லது விடுதலை சுதந்திரத்தை கோருபவர்களை அடக்க, பலவந்தமாக கடத்தி காணாமல் ஆக்குவதையும் ஓர் ஆயுதமாக ஆட்சியாளர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். காணாமல் ஆக்கப்படுதலின் அரசியல் எனப்படுவது, எதிர்ப்பாளர்களை உடல் ரீதியாக அழித்தொழிப்பது மட்டுமல்ல, அவர்கள் சார்ந்திருக்கும் சமூகத்தையும் பயமுறுத்துவதே இந்தவகை அரசியலின் நோக்கம் ஆகும். ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் தமது உரிமைகளுக்காக கிளர்ந்தெழுந்து போராடுவதும், வேறுவகையான சமூக கட்டமைப்புக்காக கூட்டிணைந்து செயல்படுவதும், இந்த அரசியலின் மூலமாக தடுக்கப்படுகின்றது. புரட்சிக்கு அல்லது மக்கள் திரட்சிக்கு தலைமை தாங்கும் இயக்க மற்றும் தொழில்சங்க தலைவர்களும், அவற்றில் தீவிர ஈடுபாடுடைய செயல்பாட்டாளர்களும் கடத்தப்பட்டோ, கைதுசெய்யப்பட்டோ, தடுத்து வைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்படுகின்றனர்.

இலங்கைத்தீவுக்குள் ஆள்கடத்தல் மற்றும் காணாமல் ஆக்குதல் சம்பவங்களின் ஆரம்பகால வரலாறு எங்கிருந்து தொடங்குகிறது என்றால், அது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்தியே நடத்தப்பட்டு வந்துள்ளது.

1980ஆம் ஆண்டு, இடதுசாரி சிங்கள தேசிய அமைப்பான ஜேவிபி மேற்கொண்ட ஆயுத கிளர்ச்சிக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட இளையோருக்கு, சட்டத்தின் பாதுகாப்பு கிடைக்காத வகையில் சுதந்திரம் பறிக்கப்பட்டு, அவர்களுக்கும் குடும்பத்தினருக்குமான வெளி உலகத் தொடர்புகள் அறுக்கப்பட்டு, அவர்களின் உயிருக்கு என்ன நடந்தது? என்ற தகவல் அறியப்படாமலேயே மறைத்து வைத்து, பலவந்தமான முறையில் காணாமல் ஆக்கும் சம்பவங்கள் நடத்தப்பட்டன.

அடுத்ததாக, தமிழ் மக்களின் மரபு வழித் தாயகம் ஆகிய வடக்கு கிழக்கு மாகாணங்களில் 2009ஆம் ஆண்டு மே மாதம் வரைக்கும் நடைமுறை நிர்வாக அரசு ஒன்றை விடுதலைப் புலிகள் இயக்கம் நிர்வகித்து வந்ததால், புலிகள் இயக்கத்தின் நிலகட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு வெளியே அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு உயர்கல்வி, மருத்துவம், வெளிநாட்டுப் பயணம், இன்னபிற தேவைகளுக்கு என்று பிரயாணம் செய்தவர்களும், அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களில் வசித்து வந்தவர்களும், புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்றோ, அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் என்றோ, சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டோ, கடத்தப்பட்டோ காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

1980களில் தொடங்கி 2023 ஜனவரி 24 வரைக்கும் இலங்கையில் ஏறக்குறைய 60,000 தொடக்கம் ஒரு இலட்சம் வரையிலானோர் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை மதிப்பிட்டுள்ளது. இது உலகளவில் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலைக் கொண்டிருக்கும் நாடுகளின் தரவரிசையில் சிறீலங்கா இரண்டாம் இடத்தை வகிக்கிறது என்பதையே குத்திட்டுக்காட்டுகிறது.

**யார் இதற்குப் பொறுப்பு? யார் இதனைச் செய்கின்றார்கள்?**

இலங்கையில் ஒரு தேசியப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கும், பாதுகாப்பு படைகளினால் மேற்கொள்ளப்படும் பரந்தளவிலான ஆள்கடத்தல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கும் சம்பவங்களுக்கு, சிறீலங்கா அரசாங்கமே முழுமையான பொறுப்பு என்று நியூயோர்க்கை தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மார்ச் 6, 2008இல் வெளியிட்டிருந்த 241 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் கூறியிருந்தது. 1980 களிலிருந்து தொடரும் ஆள்கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கும் சம்பவங்களுக்கு இலங்கை அரசும், அரசோடு ஒட்டிக்கொண்டு இயங்கும் துணை ஆயுதக் குழுக்களுமே பொறுப்பு' என்று ஆசிய மனித உரிமை ஆணையம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும் கூறியுள்ளன.

1996இல் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஒன்றின் படி, 1990 தொடக்கம் 1996 வரையான காலப்பகுதியில் இலங்கையில் 11,513 பேர் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும், 1999இல் ஆசிய மனிதவுரிமை ஆணையத்தின் அறிக்கை ஒன்றின் படி, அப்போது எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத 16,742 வழக்குகள் இருந்ததாகவும் அறியக்கிடைக்கின்றது. பலவந்தமாக நடத்தப்படும் காணாமல் போதல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பணிக் குழுவின் அவதானிப்பின்படி, 2006 மற்றும் 2007ஆம் ஆண்டுகளில் உலகிலேயே அதிக நபர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள், மிகக்கூடிய அளவில் இலங்கையிலேயே பதிவாகியிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருக்கிறது.

இலங்கைத்தீவுக்குள் பலவந்தமாக காணாமல் ஆக்கும் சம்பவங்களில் பெரும்பான்மையாக இலக்கு வைக்கப்பட்டு பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள் தான்! இது எதைக்காட்டுகின்றது என்றால், இன ஒடுக்குமுறையின் ஒரு கருவியாக, தமிழ் இனப்படுகொலையின் ஒரு கூறாக, ஆள்கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கும் சம்பவங்கள் நாட்டுக்குள் நடத்தப்பட்டுள்ளன என்பதையே இது துலக்கமாக காட்டுகின்றது. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் ஆவணப்படுத்தப்பட்ட மிகப்பெரும்பாலான சம்பவங்களில் அரசாங்கப் பாதுகாப்புப் படைகளான இராணுவம், கடற்படையினர் மற்றும் பொலிஸாருக்கு தொடர்புகள் இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு காலத்தில் மனித உரிமைகள் தொடர்பாக குரல்கொடுப்பதில் மிகப்பிரபலமானவராக இருந்தாலும், தற்போது உலகிலேயே மிக அதிக அளவில் பலாத்காரமாக நடத்தப்படும் காணாமல் ஆக்குதல்களை மேற்கொள்ளும் குற்றவாளி என்ற நிலைக்குத் தனது அரசாங்கத்தைக் கொண்டு சென்றுள்ளார் என்று, மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவின் ஆசியப் பிராந்திய பிரதிப்பணிப்பாளர் எலீன் பியர்சன், ராஜபக்ஷக்களின் முதலாவது ஆட்சிக் காலத்தின்போது கூறியிருந்தார் தண்டனைகளுக்கு உட்படுத்தப்படாத விதத்தில் படையினரும் பொலிஸாரும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்குதலில் ஈடுபடும்வரை, இந்தக் கொடிய குற்றச்செயலானது தொடர்ந்தும் நடைபெறத்தான் போகின்றது என்பதையே, 2006ஆம் ஆண்டில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முடிவுக்கு வந்தமை அர்த்தப்படுத்துகின்றது எனவும் எலீன் பியர்சன் எச்சரித்தார் பின்னாளில், சிறீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையே பாரிய அளவிலான மோதல்கள் ஆரம்பித்ததன் பின்னர், பாதுகாப்புப் படையினராலும் அரசாங்கத்திற்கு ஆதரவான துணை ஆயுதக் குழுக்களி னாலும் நடத்தப்பட்ட கைதுகளும் ஆள்கடத்தல்களும், காணாமல் ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கையை ஆயிரக்கணக்காக அதிகரிக்கச் செய்தன. 2009இல் முள்ளிவாய்க்காலில் யுத்த முடிவில் நிராயுதபாணிகளாக சரணடைந்த போராளிகளும்,குடும்ப அங்கத்தவர்களால் போராளிகளும் காணாமல் ஆக்கப்பட்டுள் ளனர் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப் பட்ட நபர் ஒருவரை கைது செய்த பின்னரோ அல்லது கடத்திச் சென்ற பின்னரோ, அவர் கைது செய்யப்பட்ட சம்பவத்தை மறுக்கும் போதும், அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் குறித்த தகவல்களை மறைக்கும் போதும்,

*(9ஆம் பக்கம் பார்க்க)*

தேசியம்

# தமிழர் தேசத்தில் மலரப்போகும் திலீபனியம்!
# “பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக”

தேசிய ஒடுக்கு முறையின் மெய்நிலையை உணர்ந்து கொண்ட அரசியற் தெளிவும் விழிப்பும் பெற்ற இளையோர்கள் தமிழீழ தேசிய இன விடு தலைக்கும் நிகரமை (Socialism) சமூக மாற்றத் திற்கும் மறவழிப் போராட்டமே (Armed Struggle) ஒரேயொரு வழியாக எஞ்சி நின்றதனைப் புரிந்து கொண்டமையால். உருப்படியான செயற்றிடம் எதுவுமின்றி உணர்ச்சி வயமான வெற்றுக் கூப்பாடுகளைப்போடும் பழமைவாத தமிழ் அரசியற் கட்சிகளையோ அல்லது தேசிய இன விடுதலையை முதன்மையானதாகக் கொள்ளாத மரபுவழி மார்க்சிய இடதுசாரிக் கட்சிகளையோ தமது தலைமையாக ஏற்காமல் புரட்சிகர விடுதலை அமைப்புக்களில் தம்மை இணைத்துக் கொண்டனர். இவ்வழி தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குக் கிடைத்த அரும் பெரும் ஆற்றலே திலீபன் என்ற பெயருடன் புரட்சிகர விடுதலைப் போராளியாக, விடுதலைப் புலியாக தேசியத் தலைவர் மேதகு. பிரபாகரன் தலைமையில் புரட்சிக் கடமையாற்றினர்.

### தியாகி திலீபன் என்ன செய்தார்?

மறவழிப் போரை மீயுயர்ந்த அரசியற் போராட்ட வடிவமாகக் கொண்டு விடுதலைப் புலிகளின் அரசியல் இராணுவ வேலைத் திட்டத்தின் அடிப்படையில் புரட்சிகரமாகச் செயலாற்றிய தியாகி திலீபன் தமிழீழ தேசிய விடுதலை என்ற உன்னதமான இலட்சியத்தில் பரந்துபட்ட மக்கள் திரளை அணிதிரட்டி அவர்களுக்கு அரசியல் விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் அரசியற் பணியில் அயராது உழைத்து வந்தார். தமிழீழ தேசிய



விடுதலை நிகரமை (Socialism) சமூகப் புரட்சி ஆகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அடிப்படையான அரசியல் இலட்சியங்களை அடைவதற்காக பல்வேறு நிருவாகக் கட்டமைப்புக்களையும் துணை அமைப்புக் களையும் தலைவரின் வழிகாட்டுதலில் தனது முயற்சியால் தியாகி திலீபன் நிறுவினார். இந்த உயரிய இலட்சியங்களை அடைவதற்கான அவரால் உருவாக்கப்பட்ட கட்டமைப்புக்கள் எவை? அவற்றை எவ்வாறு நிகழ்த்திக் காட்டினார்.

### தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கம் (SOLT)

- ***தமிழீழ மகளிர் அமைப்பு***
- ***சுதந்திரப் பறவைகள் அமைப்பு***
- ***தமிழீழ நாட்டுப் பற்றாளர் அமைப்பு***
- ***தமிழீழ விழிப்புக் குழுக்கள்***
- ***தமிழீழ கிராமிய நீதிமன்றங்கள்***
- ***பொருண்மிய மேம்பாட்டு அமைப்பு***
- ***தமிழீழ ஒலி - ஒளி சேவைக் கட்டுப்பாட்டுச் சபை***
- ***தமிழர் கலாசார சபை***
- ***தொழிற்சங்கங்கள்***

தமிழீழ தேசிய சமூக விடுதலை என்ற இலட்சியத்தை முனைப்புறச் செய்து துரிதப்படுத்தும் நோக்குடன் மக்களிடத்தில் தமிழ்த் தேசப்பற்றுணர்வையும் சமூகப் பிரக்ஞையையும் தட்டி எழுப்பிக் கட்டி வளர்த்து தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத் தில் மக்களை நேரடிப் பங்குதாரர்களாக மாற்றும் நோக்குடனே இவ்வமைப்புக்கள் தியாகி திலீபனின் முயற்சியில் நிறுவப்பட்டன.

### தியாக தீபம் திலீபன்

தியாகி திலீபன் அவர்களின் நீரின்றிய உண்ணாவிரதப் போராட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆன்ம உறுதியை நிலைநாட்டிய நிகழ்வாகும். ஆயுதந்தரித்துப் போராடிய வீரன் அகிம்சை வழி யிலும் தன்னால் தாயக விடுதலைக்காக உறுதியு டன் போராட முடியும் என உலகுக்கு எடுத்துக்காட்டி செப்டெம்பர் மாதம் 15 ஆம் நாள் 1987ஆம் ஆண்டு தனது உண்ணா நோன்பைத் தொடங்கி வைத்தார் தியாக தீபம் திலீபன்.

12 நாட்கள் வெறும் வயிற்றுடன் நீதி கேட்டுப் போராடிய தியாகி திலீபன் இந்திய தேசத்தை தலைகுனிய வைத்து தன்னுடலை உருக்கி தன்னுயிரை ஆகுதி யாக்கிக் கொண்டார்.

1987ஆம் ஆண்டு ஈழத்தமிழ் மக்களின் சார்பாக அப்போதைய இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத் தின்படி இந்தியப் படைகள் தமிழர் பிரதேசங்களில் நிலை கொண்டனர்.

எமது பிரதேசங்களில் அமைதியை நிலை நாட்டு வோம் என்று வந்திறங்கிய இந்தியப் படைகள் இங்கே எமது பிரதேசங்களில் நடந்து கொண்டி ருந்த திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பை கண்மூடிப் பார்த்துக் கொண்டிருந்தபோது புலிகளின் தலை மைப்பீடம் அவசர ஒன்றுகூடல் ஒன்றைச் செய்தது.

இந்தியத் தேசத்திடம் நீதிகேட்டு அமைதி வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்பது எனத் தீர்மானித்தார்கள். அப்போது யாழ்ப்பாண மாவட்டத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த தியாகி திலீபன் அவர்கள் தானே அந்தப் பயணத்தைத் தொடங்கி வைப்பதாகக் கூறினார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஊரெழு என்ற கிராமத் தில் 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி பிறந்த தியாகி திலீபன் தனது 23 ஆவது வயதில் 5 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து தனது உண்ணா விரதத்தைத் தொடங்கிய தியாகி திலீபன் செப்ரெம்பர் மாதம் 26ஆம் நாள் காலை 10.48மணிக்கு உயிர் துறந்தார்.

**தியாகி திலீபன் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகள் மிகவும் அடிப்படையானவையே...**

*01. இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.*

*02. பயங்கரவாத தடுப்புச் சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு உள்ள தமிழர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.*

*03. நாட்டின் அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.*

*04. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும்.*

*05. தமிழர் பிரதேசத்தில் இடைக்கால அரசு அமைந்த பிறகே அதன் பொறுப்பில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படல் வேண்டும்.*

அப்போதைய இந்திய அரசு நினைத்திருந் தால் 24மணி நேரத்திற்குள் தியாக தீபம் திலீபனின் குறித்த கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட்டிருக்க முடியும். ஆனால் அவர்கள் தாங்கள் சொல்வதையே ஈழத்தமிழர்கள் கேட்க வேண்டும் என்ற மனோபாவத்துடன் இருந்ததால் தியாகி திலீபனின் கோரிக்கைகளை ஏற்க மறுத்தனர்.

ஈழத்தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையோ அல்லது ஒரு சிறுபான்மை இனத்துக்கு எதிராக நிகழ்ந்து கொண்டிருக்கும் அடக்கு முறைகளையோ தீர்த்துவைக்க இந்திய மத்திய அரசோ - அல்லது அப்போது இந்தியத் தூதுவராக இருந்த கே.டிக்சித்தோ விரும்பவில்லை. கே.என்.டிக்சித் இந்திய வல்லா திக்கத்தின் தூதுவராகவே கடைசிவரை இருக்க விரும்பினார் என்பதே நிதர்சனமான உண்மை.

தியாக தீபம் திலீபனின் மரணத்தைத் தொடர்ந்தும் இந்திய அரசு தனது போக்கை மாற்றிக்கொள்ள வில்லை. தேசிய தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களை கலந்துரையாட இந்தியப்படை முகாமி ற்கு வருமாறு கூறி அங்கேயே சுட்டுக்



**தியாக தீபம் திலீபன் அகிம்சை ரீதியான போராட்டம் ஈழத்தமிழ் மக்கள் மூட்டிய விடுதலை நெருப்பு இன்றும் எரிந்து கொண்டிருக்கின்றது. தாயக விடுதலை நோக்கிய திலீபனின் பயணம் இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் உலக சரித்திரத்தில் இடம்பெறும்.**

கொல்லும்படி இந்தியத் தூதுவர் கே.என். டிக்சித் ஊடாக இந்தியஇராணுவத் தளபதிக்கு கட்டளை வழங்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொள்வதற்கு அப்போதைய இந்தி யத் தளபதி மறுத்துவிட்டார். அதனைத் தொடர்ந்து

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளான குமரப்பா.புலேந்திரன், உட்பட 12 உறுப்பினர்களின் மரணத்திற்கும் இந்தியா மறைமுகக் காரணமாகியது.

இத்தொடர் நிகழ்ச்சிகளின் காரணமாக இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையில் ஏற்பட்ட யுத்தமும் அந்த யுத்தத்தினால் ஏற்பட்ட கசப்பான நிகழ்வுகளும் அதன் நீட்சியாக ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதும் அதற்குப் பழிதீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆயிரக்கணக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன் எமது நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் கொடூரமாகக் கற்பழிக்கப்பட்டதும், வீடுகள், வியாபார நிலையங்கள் சூறையாடப்பட்டதும், எரிக்கப்பட்டதும் என வரலாற்றின் கசப்பான மறக்கமுடியாத பக்கங்கள் மனதில் வடுக்களாக இருக்கின்றன. இந்திய வல்லரசின் மனப்பான்மை ஒரு சிறுபான்மைத் தேசிய இனத்தின் அபிலாசைகளை எரித்து அழித்துவிட்டமையை இந்த நிகழ்வுகளின் ஊடாகத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

இந்தியாவின் ஒரு பகுதியில் எமது உடன் பிறப்புக்களான தமிழகத் தமிழர்கள் வாழும் வரை இந்திய வல்லரசு என்பது ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக் கவசமாக இருந்திருக்க வேண்டும். அவ்வாறான தொரு உறவு நிலையே இந்தியாவின் கேந்திர

நலன்களுக்கும் பாதுகாப்பாக அமைந்திருக்க முடியும். ஆனால் இதை எங்களுக்குள் இருக்கும் எட்டப்பர்கள் போலவே இந்தியாவில் உள்ள வெளியுறவு இராஜதந்திர ஆலோசகர்களும் தமது தனிப்பட்ட மற்றும் சமூகப் பிரதேசவாத நிலைப்பாடுகளால் தமிழர்களுக்கு கௌரவமான தீர்வு வருவதையோ அல்லது ஒரு தனிநாடு உருவாகுவதையோ காலங் காலமாகத் தடுத்து வருகின்றார்கள் என்பதே நிதர்சனம்.

தியாக தீபம் திலீபன் அகிம்சை ரீதியான போராட்டம் ஈழத்தமிழ் மக்கள் மூட்டிய விடுதலை நெருப்பு இன்றும் எரிந்து கொண்டிருக்கின்றது. தாயக விடுதலை நோக்கிய திலீபனின் பயணம் இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் உலக சரித்திரத்தில் இடம்பெறும்.

எமது தாயக விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டாலும் தியாகி திலீபன் போன்ற தியாக மறவர்களின் அர்ப்பணிப்புக்களை உருவாக்கிய விடுதலை வேட்கை என்றுமே வீணாகிவிடாது. தியாகி திலீபன் விரும்பிய மக்கள் எழுச்சியே விடுத லைக்கான பாதையைத் திறக்கும். அதுவே இன்றும் நடந்து கொண்டிருக்கின்றது. நேற்று அல்ல இன்று அல்ல நாளை ஒருநாள் நிச்சயம் இந்தியாவின் மனசாட்சியும் கண்ணைத் திறக்கும் என்பது உறுதியே.

## தியாகி திலீபன் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள்

யாழ் மாவட்டத்தின் அழகிய பனைமரங்கள் சூழ்ந்த ஊரெழு என்னும் கிராமத்தில் ஆசிரியரான திரு.இராசையா அவர்களின் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர் தான் பார்த்தீபன்.

அவரது வாழ்வின் தொடக்கத்திலேயே பாலூட்டி சீராட்டி அன்பு காட்டி வளர்த்த தாயின் அரவணைப்பை பத்தாவது மாத முடிவிலேயே பறிகொடுத்த திலீபனின் பிஞ்சுக்கால்கள் ஊன்றி தத்தித்தத்தி நடக்க வேண்டிய பருவத்தை கொஞ்சி மகிழ நெஞ்சில் மகிழ்வோடு பார்க்க முடியாமலேயே தாயார் மறைந் தார் என்பது திலீபனின் தகப்பனாரான இராசையா அவர்களை சோகத்தில் ஆழ்த்தியது.

தாயார் மறைந்த போது குடும்பத்தின் மூத்த மகன் இளங்கோவிற்கு வயது ஒன்பது மட்டுமே.

பெண் குழந்தைகள் இல்லாத காரணத்தினாலும் இளங்கோ ஒரு வயது என்பதினாலும் தியாகி திலீபனின் தந்தை இராசையா ஒரு பள்ளி ஆசிரியர் என்பதாலும் குழந்தை திலீபனை கவனிக்க வீட்டில் யாரும் இல்லை.

ஊரெழுவில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள கரந்தன் என்ற சிற்றூ ரில் தியாகி திலீபனின் பேத்தியாரும் சிறிய தாயான இராசலட்சுமியும் - வசித்து வந்தனர்.

- பார்த்தீபன் பேத்தியார் வயதானவர் என்பதால் அவரின் சிறிய தாயாரான இராசலெட்சுமியின் பொறுப்பில் தியாகி திலீபனை இராசையா அவர்கள் கரந்தன் சென்று ஒப்படைத்தார்.

குழந்தைப் பருவத்தில் தாயை இழந்த தியாகி திலீபன் சிறிய தாயின் அரவணைப்பில் வளரத் தொடங்கினார். இராசையா அவர்களும் தியாகி திலீபனின் சகோதரரும் ஒவ்வொரு விடுமுறை நாட்களிலும் சென்று தியாகி திலீபனைப் பார்த்து விட்டு வருவார்கள்.

ஒன்றரை வயதான போது சகோதரர் தகப்பன் என இருவரில் யார் பார்க்க வந்தாலும் தானும் அவர்களுடன் வரப்போவதாகக் காலைக் கட்டிக்கொண்டு அழுது அடம்பிடிப்பார். இதனால் அவருக்கு இரண்டு வயதான போது அவரை ஒரேய டியாக வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டார் தந்தை.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் இராசையா அவர்கள் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கும் போது குழந்தை தியாகி திலீபனையும் கூடவே அழைத்துச்செல்வார். மூன்று வயதில் தியாகி திலீபனை உரும்பிராயில் உள்ள பாலர் பாடசாலை ஒன்றில் தந்தையார் சேர்த்துவிட்டார். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்கு மிக அண்மையிலேயே இப்பாலர் பாடசாலை இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பாலர் பாடசாலை முடிந்ததும் அப்பாடசாலைக்கு உள்ள பலசரக்கு கடையில் தகப்பனுக்காக காத்துக்கொண்டிருப்பார் தியாகி திலீபன் உரும்பிராய் விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள அந்தப் பலசரக்குக்கடை முதலாளி திலீபனு க்கு தினமும் இனிப்பு வழங்கி மகிழ்வார்.

தியாகி திலீபன் வளர வளர அவரால் தந்தைக்கும் சகோதரர்களுக்கும் பிரச்சினைகள் குறைய ஆரம்பித்தன. தன் வேலைகளை தானே கவனிக்கும் பக்குவத்தை அவர் மிகச் சிறுவயதிலேயே பெற்றுவிட்டார்.

பாலர் கல்வியை முடித்துக்கொண்ட தியாகி திலீபனை தான் கல்வி



கற்பித்துக்கொண்டிருந்த உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திலேயே ஆரம்பக் கல்வி கற்பிப்பதற்காக இராசையா அவர் கள் சேர்த்து விட்டார்.

எப்போதும் வகுப்பில் முதல் மாணவனாகவே திகழ்வார். ஒரு வருடத்தில் படித்து முடிக்க வேண்டிய பாடங்களை எல்லாம் இரண்டு மூன்று நாட்களில் இரவு பகல் பாராமல் கற்று முடிப்பது என்பது அவரின் தனித்திறனாகும்.

சிறுவயதிலிருந்தே பெரும் அறிஞர்களின் நூல் களை எல்லாம் விரும்பி படிக்கத் தொடங்கினார். சிறுவயதிலேயே அவருக்கு ஆஸ்துமா வியாதி என்பது இருந்தது.

குளிரில் மூச்சுவிட முடியாமல் திணறுவார் அடிக்கடி அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வார் தந்தை.

சிறுவயதில் இருந்து வானொலிப் பெட்டியை அருகில் வைத்துக்கொண்டு கிரிக்கட் வர்ணனையினை கேட்பதில் பார்த்தீபனுக்கு அதிக விருப்பம் இருந்தது சில சமயம் சாப்பாட்டில்கூட அக்கறையின்றி அதைக்கேட்டுக்கொண்டிருப்பார்.

ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்து க.பொ.த பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

அப்போது இரவு பகலாக ஓய்வு உறக்கம் இன்றி படித்ததன் காரணமாக அவரது கண்கள் பாதிக்கப்பட்டன. அப்போது யாழ் வைத்தியசாலையில் கண் வைத்திய நிபுணராகவிருந்த வைத்தியர் திருமதி. கண்ணுத்துரையிடம் அவர் சிகிச்சை பெற்றார்.

அவர் ஒவ்வொரு நாளும் நீண்டநேரம் விழித் திருந்து படிக்கக்கூடாது என்று அறிவுறுத்தியது மட்டுமன்றி கண்களுக்கான கண்ணாடியையும் சிபாரிசு செய்தார். அதிலிருந்து தான் அவர் கண்ணாடி அணியத் தொடங்கினார். பின்னர் க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த அவருக்கு யாழ் பல்கலைக்கழக வைத்தியபீட மாணவனாகப் படிப்பதற்கு அழைப்பு வந்தது. அதை ஏற்க மறுத்து விடுதலைப் போராட்டத்தில் இணைய அவர் முடிவு செய்தார்.

1974ஆம் ஆண்டு தை மாதம் யாழ் நகரில் நடை பெற்ற நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் மிகவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டார். அந்த மாநாட்டில் தமிழ் இனத்தின் துரோகி ஒருவ ரின் கட்டளை மூலம் ஒன்பது அப்பாவித் தமிழர்கள் அங்கு தியாகி திலீபன் கண் முன்னால் கொல்லப்பட்டதைக் கண்டு தியாகி திலீபன் கோபமுற்றார். தமிழர்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற விடுதலைத்தாகம் அந்தச் சிறுவயதில் அவர் நெஞ்சில் நெருப்பாக பற்றி எரியத் தொடங்கியது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் போது கல்வியிலும் விளையாட்டிலும் மிகவும் திறமைசாலியாக விளங்கினார். விளையாட்டுத் துறையின் தலைவனாகவும் சிறந்த சதுரங்க விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்தார். 1977ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத் தில் யாழ்ப்பாணம் நோக்கிவந்த தமிழ் அகதிகளு க்கு தன்னாலான உதவிகளைச் முன்னின்று செய் தார். அப்போது அவருக்கு வயது 13 தான் இருக்கும் அந்த இனக்கலவரக் கொடுமைகள் தியாகி திலீப னின் நெஞ்சில் சுதந்திர தாகத்தை இன்னும் வளர்த்தது அந்த வயதிலேயே விடுதலைப் புலி களின் அதிரடித் தாக்குதல்களை மானசீகமாக மகிழ்ச்சி ததும்ப வரவேற்கத் தொடங்கினார் தியாகி திலீபன்.

## தியாகி திலீபனின் அரசியற் செயற்பாடுகள்

யாழ்ப்பாண - குடாநாடு தமிழீழ விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் 1985ஆம் ஆண் டின் இறுதிப் பகுதியில் வந்த பின்னர் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த தியாகி திலீபன் மிகச் சிக்கலான பிரச்சினைகளையெல்லாம் பொது மக்கள் மத்தியில் தீர்த்து வைத்திருக்கின்றார்.

1986ஆம் ஆண்டு அச்சுவேலியில் ஏற்பட்ட ஒரு சிறு பூசல் காரணமாக தனியார் பேருந்துகளின் சொந்தக்காரர்கள் ஒரு வாரகாலமாக பேருந்துகளை ஓடவிடாமல் வழிமறிப் போராட்டம் நடத்தியதால்மக்கள் மிகுந்த துன்பப்பட்டனர். தியாகி திலீபனின் மிகவும் எளிமையான முறையில் அவர்களுடன் பேசி சமரசத்துடன் இரண்டு மணித்தியாலத்தில் பேருந்துகளை ஓடச்செய்தார்.

யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களுக்கு இடையே நடைபெறும் பூசல்கள், கடல் எல்லையிலே ஏற்படும் பிரச்சினைகள், பல்கலைக்கழகத்தில் ஏற்படும் சிக்கலான பிரச்சினைகள், கடை முதலாளிகள், தொழிலாளர்களின் - பிரச்சினைகள், மூட்டை தூக்குவோர், வண்டி ஓட்டுவோர், இறைச்சிக்காரர்கள், மாநகரசபை ஊழியர்கள், ஆசிரியர்கள் எழுது வினைஞர்கள், வைத்தியர்கள், தாதிமார்கள் வைத்தியசாலை சிற்றூழியர்கள், வழக்கறிஞர்கள், லொறிச் சொந்தக்காரர்கள் இப்படிப் பலகரமானவர்களின் பிரச்சினைகளையெல்லாம் உடனுக்குடன் பேசிச் சமரசமாகத் தீர்த்துவைத்தவர் தியாகி திலீபன்.

யாழ்ப்பாண கரையோரக் கிராமமான நாவாந்துறையில் தமிழர்களுக்கும் இஸ்லாமியருக்கும் இடையில் பலமான இனக்கலவரம் ஏற்பட்டது. கத்திகள், பொல்லுகள், கைக்குண்டுகள், துப்பாக்கிகள் எல்லாம் தாராளமாகப் பாவிக்கப்பட்டன. ஒரே நாளில் பலர் இருபக்கத்திலும் மாண்டனர்.

தியாகி திலீபன் தன்னந்தனியாக இரு சமூகத்தவர்களையும் இரவிரவாகச் சென்று சந்தித்தார். இதன் முடிவாக அடுத்தநாள் கலவரம் நின்று விட்டது.

"சகல ஒடுக்கு முறைகளையும் உடைத்தெறிந்து சமதர்ம சோசலிச தமிழீழம் படைப்போம்...

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்கள் மத்தியில் மாபெரும் செல்வாக்கு இருப்பதற்குக் காரணம் இவர்கள் சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களிலிருந்தும் தம் உயிரையே அர்ப்பணித்து மக்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல எந்தச் சிக்க லான சமூகப் பொருளாதாரப் பிரச்சினையானாலும் புலிகளின் அரசியல் துறைத் தலைவர் தியாகி திலீப னால் அவை நிச்சயமாகத் தீர்க்கப்படும் என்ற உயர்ந்த நம்பிக்கையாலும் ஏற்பட்ட செல்வாக்குத்தான் அது.

மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இரவு பகலாக உறங்காது வேளாவேளைக்கு உணவின்றி அயராது உழைப்பதில் திலீபனுக்கு நிகர் திலீபன் தான். இப்படிப்பட்ட தியாகி திலீபன் அன்று வாழவதங்கி தமிழினத்துக்காக தன்னையே அழித்துக்கொண்டார்.

**தியாகி திலீபனின் போராட்ட வழி முறையால் அவர் எவ்வாறு முதன்மைப்பட்டு நிற்கின்றார்?**

இப்படி அமைதிவழி அறப்போராட்டங்கள் மறவழி அரசியற்போராட்டமாக முற்போக்கான புரட்சிகரமான மாற்றமாக மாறுதலடைந்த பின்னர் தியாகி திலீபன் என்ற உன்னதமான புரட்சிகரப் போராளி 265 மணி நேரங்களாக ஒரு சொட்டு நீர் கூட அருந்தாது தனது வயிற்றிலே போராட்டத்தைத் தொடங்கி, தமிழீழ மக்கள் கண்முன்னே பார்த்திருக்க

அணுவணுவாக உருகித் துடிதுடித்து ஈகச் செம்மல் ஆனமை அதன் உண்மைப் பொருளில் அமைதிவழிப் போராகிவிடாது அது மறவழி அரசியற் போரிற்கான அறைகூவலே.

இந்தியா பற்றிய எந்தப் புரிதலும் இல்லாமல் தம்மீது தொடுக்கப்பட்ட பண்பாட்டுப் போரின் விளைவாக வந்த சமஸ்கிருதமயப்பட்டு இந்துத்துவமாகிவிட்ட தமது வழிபாட்டு முறையின் விளைவினால் விளைந்த இந்தியா புனித பூமி என்ற சிந்தனையும் (தமது சாம்பலைக் காசியில் கரைக்கத் துடிப்பதைப் பெரும் பேறென்றெண்ணும் மனநிலை) அகிம்சைக்கு இலக்கணமாக மிகப் பெரிய ஒப்புரவு நாடாக இந்தியாவைப் பார்த்துப் புளங்காகிதமடையும் எம்ம வர்களின் அறியாமை என எமது சமூகம் இருந்த காலத்தில் தேசிய இனங்களின் சிறைக்கூடமான இந்திய அரசு பயங்கரவாதத்தின் “அகிம்சை” என்ற போலி முகத் திரையைக் கிழித்தெறிந்து உலகெங்கிலுமுள்ள தமிழர்களை விழிப்புப்பெறச்செய்ய மிக 6 வலுவான போரியல் உத்தியாகவே தியாகி திலீபன் ஒரு சொட்டு நீரும் அருந்தாத உண்ணா நோன்பைக் கையிலெடுத்தார். அவர் அந்த நேரத்தில் தேர்ந்தெடுத்த இந்த உத்தி ஆயிரம் கனரக போர்க் கருவிகளை மறவழிப்போரில் இணையத் தூண் டியதோடு இது இந்தியா பற்றிய அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த எமது மக்களுக்கு இந்திய அரச பயங்கரவாதத்தினையும் நாம் எதிர்த்துப் போராடி னாலேயே தமிழீழம் சாத்தியம் என்ற தெளிவை ஏற்படுத்தி எமது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்ட த்தை இன்னும் முன்னோக்கி நகரச் செய்து வல்லாதிக்க எதிர்ப்பையும் எமது விடுதலைப் போராட்ட வேலைத்திட்டத்தின் செயற்திட்டத்தில் இடம்பெறச் செய்து மேலும் புரட்சிகரமானதாகவும் முற்போக்கானதுமாகியது.

மூன்று இலட்சம் மக்கள் கண்முன்னே பார்த்திருக்க உலகெல்லாம் பரந்துவாழும் தமிழர்கள் தியாகி திலீபனின் உண்ணாவிரத மேடையை - நோக்கி கண்ணீரும் கம்பளையுமாய் நிற்க 1 தன்னையே உருக்கி உருக்கி தனது வயிற்றிலேயே போராட்டத்தை ஆரம்பித்து உண்ணாவிரத - மேடையிலிருந்து ஆற்றிய வரலாற்றுச் சிறப்பு மிக்க உரை சொல்லிய, சொல்ல வந்த செய்திகள் தான் என்ன?

வரலாற்று புகழ்மிக்க அவரது இறுதி உரையில் “சகல ஒடுக்கு முறைகளையும் உடைத் தெறிந்து சமதர்ம சோசலிச தமிழீழம் படைப்போம்”, “மக்களே எப்பொழுதும் விழிப்பாக இருங்கள்” “எமக்கு ஒரு தெளிவான தலைவர் கிடைத்திருக்கிறார்.” “மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும்” என்று புரட்சிகரமாக மக்கள் முன்னி லையில் உரையாற்றினார். தியாகி திலீபன் அவர்கள்.

ஆம் சகல அடக்குமுறைகள் என்னும் போது சிங்கள பௌத்த பேரினவாத ஒடுக்குமுறையுடன் தமிழர்களின் மீதான இந்திய அரச பயங்கரவாத ஒடுக்கு முறைகள், சாதிய ஒடுக்கு முறைகள், சமூக ஏற்றத் தாழ்வுகள், பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் என அனைத்து விதமான ஒடுக்கு முறைகளையும் உடைத்தெறிந்து நிகரமை தமிழீழம் படைப்ப தையே அவர் தனது கடைசி உரையில் உறுதியா கக் குறிப்பிட்டிருக்கிறார்.

தமது நேரடி எதிரியான சிங்கள பௌத்த பேரின வாதத்தைத் தெரிந்து வைத்திருக்கும் எமது மக்கள் இந்திய அரச பயங்கரவாதம் உட்பட்ட இனக் கொல்லிகள் குறித்துத் தெளிவடையாமல் இருப்பது தேன் தடவிக் கொடுக்கப்படும் நஞ்சினைக் கேட்டுப் பெற்று உவகையுடன் உண்டு நாசமாய் மடிந்து போவதாகிவிடும் என்பதாலே தமிழீழ மக்களை எப்பொழுதும் விழிப்பாக இருங்கள் என்று குறிப்பிட் டிருக்கிறார்.

தமிழீழ விடுதலையை தேசிய இனங்களின் சிறைக் கூடமான இந்தியா ஒருபோதும் ஏற்காது என்பதால் இந்திய வல்லாதிக்கத்தை எதிர்த்துப் போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை எனத் தெளிவுடனும் நெஞ்சுரத்துடனும் சிந்தித்த தலைவர் எமக்கு கிடைத்திருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மக்கள் அரசியல் விழிப்புப் பெற்று புரட்சிகர சக்திகளாக அணிதிரண்டு போராடினால் மட்டுமே அத்தனை ஒடுக்கு முறைகளையும் உடைத்தெறிந்து சுதந்திர தமிழீழம் படைக்க முடியுமென்ற அறுதியும் இறுதியுமான மெய்நிலையையே அவர் மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்று கூறி மக்கள் மயப்பட்ட போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்தார்.

தன்னை ஆகுதியாக்கி இந்தியா என்ற கொடிய அரக்கனின் “அகிம்சை” என்ற முகத்திரையைக் கிழித்தெறிந்து அதன் கோர முகத்தை துலாம்பர

## “மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்...

மாகக் காட்டிய தியாகி திலீபன் தமிழீழ விடுதலையின் முதன்மை எதிரி இந்தியாவே என்ற தெளிவான செய்தியை மக்களிடத்தில் உய்த்துணரச் செய்து தமிழீழ விடுதலைக்கான பாதையின் முன்னோக்கிச் செல்வதற்கான மீதி வழியை எமக்கு உணர்த்திக் காட்டியிருக்கிறார்.

**தியாகி திலீபனின் இறுதிப் பயணங்களின் சிறு நினைவுகள்**

**தியாக தீபம் திலீபன் முதலாம் நாள்** 15.09.1987 தியாகப் பயணம் தொடர்வதற்கான ஆரம்பம் இன்று காலை 9.00 மணி தொடக்கம் பாடசாலை மாணவர்கள் வரிசையாக வந்த தியாகி திலீபனைச் சந்தித்து விடை பெறுகின்றார்கள். தனது தொலைத் தொடர்பு கருவியில் தேசிய தலைவருடன் சில நிமிடங்கள் உரையாடுகின்றார் தியாகி திலீபன் நல்லூ ர் கந்தசுவாமி கோயிலை நோக்கி நடக்க ஆரம்பிக் கின்றார். வீதியின் இருபக்கமும் மாணவர்கள் பொது மக்கள் கையசைத்து ஈகி திலீபனை வழியனுப்புகின்றார்கள். அப்போது எதிர்பாராத முகமாக ஒரு தாய் கண்களில் கண்ணீர் மல்க தியாகி திலீபனை மறித்து தனது விரல்களால் திருநீற்றை திலீபனின் நெற்றியில் திலகடுமிடுகின்றார்.

காலை 9.45 மணிக்கு உண்ணாவிரத மேடைக் கதிரையில் அமர்ந்து கொண்டார் தியாகி திலீபன் அத்துடன் திலீபனின் தியாகப் பயணமும் ஆரம்பமாகியது.

வாசிப்பதற்கு புத்தகங்கள் கேட்டுக்கொண்டார் தியாகி திலீபன் அதன்படி அவர் விரும்பிப் படிக்கும் விடுதலைப் போராட்டங்கள், பிடல், கஸ்ரோ, சேகு வாரோ. சொஜிமின், யசீர் அரபாத் போன்ற நூல்களும் தியாகி திலீபனிடத்தில் வழங்கப்பட்டன.

தியாகி திலீபனின் உண்ணாவிரத மேடைக்கு அருகில் இருந்த மேடையில் பாடசாலை மாணவ மாணவிகளினதும் இளைஞர் யுவதிகளினதும் நிகழ்வுகளும் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்தன. வேறுபலர் தியாகி திலீபனின் உண்ணா விரதம் பற்றி மக்களிடம் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தார்கள்.

**தியாக தீபம் திலீபனின் இரண்டாம்** நாள் 16.09.1987 இன்று அதிகாலை 5 மணிக்கு உறக்கத்தை விட்டு எழுந்து தியாகி திலீபன் வழமை போல் சகல தினசரிப் பத்திரிகைகளையும் ஒன்றும் விடாமல் படித்தார்.

காலை 10.00 மணி அளவில் அருகில் இருந்த மேடையில் நிகழ்வுகளும் ஆரம்பமாகத் தொடங் கின. கவிதை, கதை, பேச்சு, நாடகம் என இளம் சந்ததியினர் முந்தியடித்து நிகழ்வுகளை விறுவிறுப்பாக கொண்டு சென்றார்கள்.

தியாகி திலீபன் அவர்கள் நான் மக்களிடம் உரையாற்ற விரும்புகிறேன் என்று அருகில் இருந்தவர்களிடம் ஒலிவாங்கியைக் கேட்டு வாங்கி உரையாற்றினார்.

தியாகி திலீபனின் உரை “எனது அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய மக்கள் அனைவருக்கும் எனது வணக்கம். நின்று கொண்டு பேச முடியாத நிலையில் நான் இருப்ப தால் இருந்து கொண்டே பேசுகின்றேன்.

நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனா என்று எனக்குத் தெரியாது. அதனால் இன்று உங்களுடன் பேசவேண்டும் என்று விரும்புகின்றேன் நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றோம். எமது நாட்டு இலட்சியப் போராட்டத்தில் இன்று வரையில் 650 போராளிகளை நாங்கள் இழந்துள்ளோம்.

மில்லர் இறுதியாகப் போகும்போது அவருடன் நான் கூட இருந்தேன். அவர் என்னிடம் ஒரு வரி கூறினார் நான் எனது தாய் நாட்டிற்காக உயிர் துறப்பதை எண்ணும் போது, மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். எமது மக்கள் விடுதலை அடை வதை எனது கண்களால் காண முடியாது என்பதே எனது ஒரே ஏக்கம்: என்று கூறிவிட்டு மில்லர் வெடி மருந்து நிரம்பிய லொறியை எடுத்துச் சென்றிருந் தார்.எமது விடுதலைப் போரில் மரணித்த 650 போராளிகளும் அனேகமாக எனக்குத் தெரிந்து தான் மரணித்தார்கள். அவர்களை நான் மறக்கமாட்டேன்.

உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த தலைவரின் அனுமதியைக் கேட்டேன். அப்பொழுது தலைவர் கூறிய வார்த்தைகள் எனது நினைவில் உள்ளன. திலீபா, நீ முன்னால் போ நான் பின்னால் வருகிறேன் என்று அவர் கூறினார். இத்தகைய ஒரு தெளிவான தலைவனை, தனது உயிரை சிறிதுகூட மதிக்காத ஒரு தலைவனை நீங்கள் பெற்றிருக்கின் றீர்கள். அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாக தமிழர்களின் அடிப்படை உரிமைகளை. தமிழீழத்தைப் பெற்றுத் தரும். அந்த அற்புதக் காட்சியை வானத்திலிருந்து அந்த 650 போராளிகளுடன் நானும் பார்த்து மகிழ்வேன். தியாகி திலீபன் மிகவும் ஆறுதலாக சோர்வுடன் ஆனால் திட்டமுடன் பேசிய அவரின் பேச்சைக்கேட்டு அங்கிருந்த மக்கள் கண்ணீர் சிந்தினார்கள். அன்று இரவு தேசியத் தலைவர் அவர்கள் வருகை தந்து தியாகி திலீபனைப் பார்வையிட்டு சோர்வுடன் படுத்திருந்த தியாகி திலீபனின் தலையை தனது கரங்களால் வருடி அரவணைத்தார்.

**தியாகி திலீபனின் மூன்றாம் நாள்** 17.09.1987 இன்று காலை 6 மணியளவில் தூக்கத்தில் இருந்து எழுந்தார். தியாகி திலீபனின் முகம் வாடி உதடுகள் வெடித்து தலை குளம்பிய தோற்றத்தில் காணப் பட்டார். சிறிது நேரத்தின்பின் தூரத்தில் தெரியும் வளக்கமான நபர்களை அழைத்து உரையாடத் தொடங்கினார். தியாகி திலீபனுடன் இருந்தவர்கள் சிறிது தண்ணீர் அருந்த வேண்டும் என்று கூறினார்கள். அதற்குக் கோபப்பட்ட தியாகி திலீபன். இனி மேல் என்னை தண்ணீர் குடிக்கச் சொல்லிக் கேட்க வேண்டாம். உண்ணாவிரதம் என்றால் என்ன? தண்ணீர், குளுக்கோஸ், இளநீர் எல்லாமே உணவுதான் இந்த உணவுகளை எடுத்துக் கொண்டு எவ்வளவு நாளும் உயிர் வாழலாம். ஆனால் அது உண்ணாவிரதம் இல்லை. உண்ணாவிரதம் என்றால் அதற்கு அர்த்தம் வேண்டும். ஒரு புனித இலட்சியம் நிறைவேற வேண்டும் என்பதற்காகத்தான் எங்களை நாங்கள் வருத்திக்கொண்டு உண்ணா விரதம் இருக்கின்றோம். இது வெறும் அரசியல் இலாபத்திற்காகக் தொடங்கப்பட்டது அல்ல. வயிறு முட்டக்குடித்து விட்டு மக்களை ஏமாற்ற என்னால் முடியாது என்றார் தியாகி திலீபன். நல்லூர் ஆலயப் பகுதி மக்கள்கூட்டத்தினால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கடந்த இரு நாட்களாக ஆயிரக்கணக்காக வந்திருந்த மக்கள் கூட்டம் இன்று இலட்சத்தைத் தாண்டியிருந்தது. யாழ்ப்பாண நகரத்திலுள்ள பாடசாலைகளில் இருந்து மாணவ மாணவிகள் காலை 9.00 மணி முதல் வரிசையாக வெள்ளைச் சீருடையில் அணிவகுத்து வீதியை நிறைக்கத் தொடங்கினார்கள். தாய்க்குலம் தியாகி திலீபனின் வாடிவதங்கிய சோகத்தைக்கண்டு கண்ணீர் வடித்தவாறு காணப்பட்டார்கள். இன்று மதியம் அடைமழை தொடங்கியது மக்கள் நனைத்து கொண்டிருந்தார்கள் வாடிய நிலையிலும் சோர்ந்த நிலையிலும் மக்கள் மழையில் நனைவதைக்கண்ட தியாகி திலீபன் அவர்களை நனைய வேண்டாம் என்று கைகளை அசைத்துக் சைகை காட்டி னார். ஆனால் அவர்களோடு அசைவதாக இல்லை. தியாகி திலீபனுடன் சேர்ந்து அவரின் கோரிக்கைகள் வெற்றிபெற தினமும் நல்லூர் கோவில் வீதியில் அடையாள உண்ணாவிரதம் இருப்போர் தொகையும் அதிகரித்துக்கொண்டே வந்தது. செல்வி சிவா. துரையப்பா என்றபெண் அச்சுவேலியைச் சேர்ந்தவர். 17.09.1987 இல் தியாகி திலீபனுக்கு ஆதரவாக மூன்றாவது சிறிய மேடை ஒன்றில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

**தியாக தீபம் திலீபனின் நான்காம் நாள்**

18.09.1987 இன்று அதிகாலை 5.00 மணிக்கு தியாகி திலீபன் எழுந்திருந்தார். நல்லூரில் தியாகி திலீபனுக்காக மக்கள் பூசை வழிபாடுகளிலும் அரச்சனை செய்தும் நூற்றுக்கணக்கான அர்ச்சனைகள் தியாகி திலீபனின் மேடையை நோக்கியும் வந்து கொண்டி ருந்தது. யாழ்ப்பாணத்திற்கு வெளியில் இருந்தும் மக்கள் பேருந்துகளில் வந்து குவிந்த வண்ணம் இருந்தார்கள். தளபதி கிட்டு அண்ணாவின் தாய் தியாகி திலீபனை வாரி அணைத்து உச்சி முகர்ந்து அழுதார். சக இயக்க உறுப்பினர்கள் தியாகி திலீபனுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். மகளீர் இயக்க உறுப்பினர்கள் தம்மைக்கட்டுப்படுத்த முடியாமல் அழுதார்கள். தளபதி சூசை, பிரபா, ரகு அப்பா. தளபதி புலேந்திரன், தளபதி ஜொனி போன்றோர் கண்கலங்கி திலீபனின் தலையை வருடி பேசி விட்டுச் சென்றார்கள். இன்று மாலை சிறிலங்கா சமசமாயக் கட்சித் தலைவர் திரு. வாசு தேவ நாணயக்கார மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்து தியாகி திலீபனை பார்வையிட்டு சென்றிருந்தனர்.

**தியாக தீபம் திலீபனின் ஐந்தாம் நாள்** 19.09.1987 வழக்கம் போல்

பத்திரிகைகளைப் படிக்கும் தியாகி திலீபனால் இன்று இவற்றைப் படிக்க முடிய வில்லை. இன்றும் மக்கள் கூட்டம் நிரம்பிக் காணப் பட்டது. இன்று தியாகி திலீபன் எழும்ப முடியாமல் போர்வைக்குள்ளேயே இருந்தார். அவரது உடல் மிகவும் வேர்த்துக் கொட்டியது.

**தியாக தீபம் திலீபனின் ஆறாம் நாள்**

20.09.1987 இன்று தியாகி திலீபன் காலை 5 மணிக்கு தூக்கத்தில் இருந்து விளித்துக் கொண்டார். யாழ்ப்பாணத்திற்கு வெளியில் இருந்து மக்கள் பேருந்துகளில் வந்து குவிந்த வண்ணம் இருந்தார்கள். நிகழ்வுக ளும் தொடர்ச்சியாக போய்க் கொண்டிருந்தது.

**தியாக தீபம் திலீபனின் ஏழாம் நாள்**

21.09.1987 இன்று தியாகி திலீபன் அவர்கள் சற்றுத் தாமதமா கவே கண் விளித்துக் கொண்டார். இயக்க உறுப்பி னர் யோகி அவர்கள் தியாகி திலீபனுக்கு அருகாமையில் அமர்ந்து நேற்றைய பேச்சுவார்த்தையில் நமக்குச் சாதகமான தீர்க்கமான நிலைப்பாட்டை இந்தியத் தூதுவர் எடுக்கவில்லை என்பதைப் பற்றி யோகி தியாகி திலீபனிடம் விளக்கிக் கூறி என்னசெய்யலாம் எனக் கேட்டார். பேச்சுச் சக்தியற்று துவண்டு கிடந்த தியாகி திலீபன் இவற்றை கேட்டு விட்டு வழக்கம் போன்று புன்னகைத்தார். அதன் பின் எந்த முடிவும் நல்ல முடிவாக இருக்க வேண்டும். ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்று வதாக அவர்கள் எழுத்தில் தர வேண்டும் இல்லை யென்றால் நான் உண்ணாவிரதத்தை கடைசி வரை கைவிடமாட்டேன் என்றார்.

வல்வெட்டித்துறையிலே தியாகி திலீபனுக்கு ஆதரவாக உண்ணாவிர தமிருக்கும் ஐந்து தமிழர் களையும் தலைவர் பிரபாகரன் நேரில் சந்தித்ததையும் தனது உண்ணாவிரதம் தொடர்பான செய்தி களையும் இன்று பத்திரிகையில் பிரசுரித் ததையும் அறிந்து கொண்டார் திலீபன்.

**தியாக தீபம் திலீபனின் எட்டாம் நாள்**

22.09.1987 5 இன்று அதிகாலையிலே ஒரு குழுவினர் கொட்டகைகள் போடும் வேலையை ஆரம்பித்து விட்டனர். - முதல் நாள் லட்சக்கணக்கான மக்கள் வந்ததால் கொட்டகைகள் போடத் தொடங்கினார்கள். தமிழர் மாயகம் எங்கும் பரவலாக மக்கள் அடையாள உண்ணாவிரதங்களை மேற்கொண்டு தம் எழுச்சி யைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

**தியாக தீபம் திலீபனின் ஒன்பதாம் நாள்**

23.09.1987 தியாகி திலீபன் அருகில் இருப்பவர்கள் தியாகி திலீபனை நன்கு உற்றுப்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள். திலீபன் உடலில் சகல உறுப்புக்களும் செயலற்றுக் கொண்டிருக்கின்றன. உதடுகள் அசைகின்றன. ஆனால் சத்தம் வெளிவரவில்லை. உதடுகள் வெடித்து வெளிறிவிட்டன. கண்கள் உள்ளே போய் குளிகளாகக் காணப்பட்டன. யாழ்ப் பாண நகரத்திலுள்ள 17 பாடசாலைகளில் இருந்து 5000ற்கும் அதிகமான மாணவ மாணவியர் அணிவகுத்து வந்து தியாகி திலீபனைப் பார்த்து கண் கலங்கியவாறு இருந்தார்கள். யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், ஊழியர்களும் ஏராளமாக தொடர்ச்சியாக தியாகி திலீபனை வந்து பார்த்த வண்ணம் இருந்தார்கள். இன்று காலை 9 மணியளவில் யாழ் கோட்டை இந்திய இராணுவமுகாம் முன்பாக ஆயிரக்கணக்கான மக்கள் கோட்டை யின் பிரதான வாசலில் அமர்ந்து இந்தியப் படையினர் வெளியேறாதவாறு மறியல் போராட்டம் செய்தனர். இன்று காலையில் இந்தியப் படையினர் தென்பிராந்தியத் தளபதி லெப்டினன் ஜெனரல் திபேந்தர் சிங் அவர்கள் தேசிய தலைவர் திரு.வே பிரபாகரனைச் சந்தித்தார். பின்னர் இருவரும் தனித்தனி வாகனங்களில் புறப்பட்டு யாழ் கோட்டை முகாமிற்குள் சென்றனர். சுமார் 1 மணி நேரத்திற்கு மேலாக பேச்சு வார்த்தை நடைபெற்றது. ஆனால் அதிலும் ஏமாற்றமே கிடைத்தது. யாழ் மாவட்டத் தில் உள்ள சகல அரச அலுவலகங்களிலும் வேலைகள் நடைபெறாத வண்ணம் பொது மக்கள் மறியல் போராட்டம் செய்துவரத் தொடங்கினர். யாழ்ப்பா ணக் குடாநாட்டின் பல கிராமங்களிலும் மக்கள் குழுக்களாகச் சேர்ந்து அடையாள உண்ணாவிரத த்தில் ஈடுபடத் தொடங்கினார்கள். தியாகி திலீபனின் 5 கோரிக்கைகளையும் நிறைவேற்றுமாறு கோரி பல சமூகத்தொண்டு அமைப்புக்களும் தனியார் நிறுவனங்களும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு மகஜர்களை இந்நாளில் அனுப்பி வைத்தார்கள். இன்று மதியம் 1.30 தொடக்கம் 6.30 மணி வரையள்ள சுமார் 5 மணி நேரம் மற்றும் ஒரு பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது. இதில் இரு தரப்பு முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டார்கள்.

இறுதியில் இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் இந்தியத் தூதுவரால் வெறும் உறுதி மொழிகளைத் தான் தரமுடிந்தது. இதனால் தியாகி திலீபனின் மரணத்திற்காக இறுதிப்பயணமும் உறுதியாகி விட்டது என்பதை இந்நாள் உறுதியாக்கியது.

அகிம்சையை காலால் மிதித்த இந்தியா அகிம்சையின் அடையாளம் என கருதப்படும் காந்தி ஜீ அவர்களின் தேசமான இந்தியாவே தமிழர்க ளின் போராட்டத்தை காலடியில் போட்டு மிதித்தது.

**தியாக தீபம் திலீபனின் பத்தாம் நாள்**

24.09.1987 இன்று திலீபனின் உடல் எதுவித அசைவும் இன்றிக் காணப்பட்டது. உள்மூச்சு மட்டும் பலமாக இழு த்துக் கொண்டிருந்தது. உடலின் நிறம் சிறிது நீல மாக மாறத் தொடங்கியது. இன்று திலீபனுக்கு ஆதரவாக மக்கள் போராட்டங்கள் முழுவீச்சாக யாழ் குடாநாடு முழுவதும் பரந்த அளவில் நடை பெறத் தொடங்கியது. வசாவிளானைச் சேர்ந்த ஒருவர் அங்கிருந்து திலீபனின் உண்ணாவிரத மேடை வரை தூ க்கு காவடியுடன் அழுதவாறு வந்தது.

எல்லோரினதும் கவனத்தையும் ஈர்த்த ஒன்றாக இருந்தது. பளை தொடக்கம் நாவற்குழி வரையுள்ள சுமார் 6000 ற்கும் அதிகமான மாணவ மாணவிகள் ஊர்வலமாக திலீபனின் இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். முல்லைத்தீவு மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் உண்ணாவிரதமும் தொடர்மறியற் போராட்டங்களும் நடந்து கொண்டிருந்தன.

**தியாகி திலீபனின் பதினொராம் நாள்**

25.09.1987 தியாகி திலீபன் சுயநினைவை இழந்திருந்தார். தியாகி திலீபனின் உடல் அங்கும் இங்குமாய் புரளத் தொடங்கியது. இன்று மாலை நான்கு மணிக்கு திலீபன் முழுமையாக கோமா நிலைக்கு வந்து விட்டார் என்பது உறுதியாகி விட்டது. இன்று காலை முதல் இலட்சக்கணக்கான மக்கள் நாட்டின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் வந்து கொண்டிருந்தார். வட்டுக் கோட்டையில் இருந்து மட்டும் 50 மாட்டு வண்டிகளில் புலிக் கொடிகளை ஏந்தியவாறு " மக்களை திரட்டி நிறைத்துக் கொண்டு வரிசையாக வந்தார்கள்.

**தியாக தீபம் திலீபனின் பன்னிரண்டாம் நாள் 26.09.1987 நல்லூரில் தீபம் அணைந்தது!**

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26ம் திகதி தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தின் மகத்தான சரித்திரம் படைத்த நாள். தமிழ் மக்களின் நியாயமான நேர்மையான 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 15.09.1987 தொடக்கம் சாகும் வரை உண்ணாவிரதம் மேற் கொண்டு வந்த விடுதலைப் புலிகளின் யாழ் பிராந்திய அரசியற்துறைப் பொறுப்பாளர் திலீபன் அவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கி 12 நாளாக தொடர்ச்சியாக 265 மணித்தியாலங்களை முடித்துக் கொண்ட வேளையில் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ம் திகதி சனிக்கிழமை காலை 10.58 மணியளவில் தமிழீழ மண்ணிற்கு தன்னுயிரை ஈர்த்து தமிழ் மக்களை மீளாத்துயரில் ஆழ்த்தினார் தியாக தீபன் அவர்கள். இதன் மூலம் உலகில் முதல் சாத்வீகப் போராட்டத்தில் உச்சக் கட்டமாக நீராகாரம் கூட அருந்தாமல் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு உயிர் துறந்து வரலாற்றில் தனி இடம் பெற்றுவிட்டார் திலீபன் அவர்கள் உயிர் துறந்த பின்பும் கூட தன் உடல் மக்களுக்கு பயன்பட வேண்டும் என்பதால் தான் இறந்தவுடன் தனது உடலை மருத்துவ பீடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற திலீபனின் இறுதி விருப்பத்தின் பேரில் வரலாற்றுச் சிறப்புமிக்க சுதமலை அம்மன் கோவில் முன்றலில் செப்ரெம்பர் 28ஆம் நாள் விடுதலைப் புலிகளினால் யாழ்பல்கலைக்கழக மருத்துவபீட வைத்திய கலாநிதி சிவராஜாவிடம் திலீபனது உடல் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

## காணாமல்...

*(5ஆம் பக்கத் தொடர்ச்சி)*

பலவந்தமாக காணாமல் ஆக்கும் சந்தர்ப்பம் இடம்பெறுவதாக அனைத்துலகச் சட்டம் கூறுகின்றது. வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்குதல் என்பது பொதுவாக சித்திரவதை மற்றும் நீதிக்குப் புறம்பான படுகொலையை மேற்கொள்வதற்காகவே நடத்தப்படுகின்றது. அதனால் இப்படியான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் கட்டாயமாக காணாமல் போகச்செய்யப்படுதல் என்பது தடை செய்யப்பட வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் சாசனம் வலியுறுத்துகின்றது. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உரித்துடையவர்கள் என்றும், அவர்களுக்கு என்ன நடந்தது? என்பதை அறிந்து கொள்ளும் உரிமை அவர்களது குடும்பத்தினருக்கு உள்ளது என்றும் ஐ.நா கூறுகிறது.

கடத்தப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்றே பொதுவாக பலருக்கும் தெரிந்திருக்கும். எனினும் இப்படி காணாமல் போகச்செய்யப்படுவோரை இரகசிய சித்திரவதை முகாம்களில் அடைத்தோ அல்லது இரகசியமாக படுகொலை செய்தோ, யாரும் அறியாத இடத்தில் புதைத்து விடும் அபாய நிலைமைகள் இன்னமும் தொடர்கின்றன. கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள், கடத்தப்பட்டவர்களின் கதியை நினைத்து கவலைப்படுவதுடன், அவர்கள் திரும்பி வருவார்கள் என்று தவிப்போடு நம்புகின்றனர். அச்சமுற்றுள்ள உறவினர்கள் நம்பிக்கையுடனும், சந்தேகத்துடனும் தமது வாழ்க்கை காலத்தை கழிக்கின்றனர். தமது அன்புக்குரியவர்கள் **உயிருடன் இருக்கிறார்களா? அல்லது இறந்து போய்விட்டார்களா? அவர்கள் எங்கிருக்கிறார்கள்?** அவர்களுக்கு நேர்ந்த கதிதான் என்ன? என்பது குறித்தெல்லாம் அறிய முடியாமல் வருடக்கணக்காக பிரிவுத்துயரோடும், புத்திர சோகத்தோடும் தாயகத்தில் தொய்வுறாமல் நீதி கேட்டுப் போராடிக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான உறவுகளில், யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த 75 வயதையுடைய நாகலிங்கம் செல்வராசாவும் ஒருவர்.

உலகம் முழுவதும்கூட யாராவது ஒரு பிரஜையை, பலவந்தமாக கடத்திக் காணாமல் ஆக்குவது என்பது ஓர் சர்வதேச குற்றமாகும். இலங்கைத்தீவுக்குள் இந்த சர்வதேச குற்றத்தினை படைத்தரப்பினர் தமது இஸ்டப்படி சுதந்திரமாக இழைப்பதற்கு, அவசரகால மற்றும் பயங்கரவாத தடைச்சட்டங்கள் கட்டுப்பாடற்ற அதிகாரங்களையும், போதியஅளவு வசதிவாய்ப்புகளையும் வழங்கியுள்ளன. சட்டத்தின் தண்டனைகளிலிருந்து விலக்களிக்கப்படுவீர்கள் அல்லது பாதுகாக்கப்படுவீர்கள் என்றவாறான உத்தரவாதத்தையோ, நம்பிக்கையையோ படைத்தரப்புக்கு வழங்கி, ஊக்கமளிப்பதற்கு ஒத்திசைவது போல சமிக்ஞ்யையாக அமையும் ஆட்சியாளர்களின் மனநிலைப் போக்குகளினால், பணம் பறிக்கும் நோக்கங்களுக்காகவும் தமிழ் முஸ்லிம் சிங்கள வர்த்தகர்களும், செல்வந்தர்களும் கடத்தப்பட்டு பயணக் கைதிகளாக மறைத்து வைக்கப்பட்டு, கப்பம் கோரி காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கும் ஐ.நா பிரகடனங்களுக்கும் விரோதமாக பலாத்காரமாக நடத்தப்படும் இத்தகைய வலுக்கட்டாயமாக காணாமல் போகச் செய்யப்படும் நடவடிக்கைகள், ஆட்சியாளர்களினதும் அரசுகளினதும் நலன்கள் சார்ந்த அரசியல் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், நின்று நிதானித்து நன்கு திட்டமிட்டே நடத்தப்பட்டுள்ளன.

பல சந்தர்ப்பங்களில், கடத்தியவர்களின் வாகன இலக்கத்தகடுகள், சீருடைகளின் நிறம், பெயர்ப்பட்டிகள், படைப்பிரிவின் இலச்சினைகள், கொண்டு செல்லப்பட்ட முகாம், சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளின் பெயர்கள், இவை குறித்த துல்லியமான விவரங்களை கண்கண்ட சாட்சிகள் அடையாளம் காட்டியிருந்த போதிலும்கூட, பாரதூ ரமான இந்தக் குற்றச் செயல்களுக்காக தண்டனை பெறுவதிலிருந்து படைத்தரப்பும், துணை ஆயுதக்குழுக்களும் தப்புவதற்கு ஏதுவான வாய்ப்புகளையே ஆட்சியாளர்கள் வழங்கி வந்துள்ளனர். செக்கிழுக்கும் மாட்டின் நடையைப்போல, ஆட்சி பீடத்துக்கு வந்த எல்லா அரசுகளாலும், நாட்டுக்குள் ஒழுங்குபடுத்தப்பட்ட சகல செயலணிகளும் தோல்வி கண்ட விசாரணைப் பொறிமுறைகளாகும். பாரபட்சமற்ற முறையில் விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை இறந்தகாலச் சம்பவங்களுக்கு பொறுப்புச்சொல்ல வைப்பது குறித்து சிறீலங்கா அரசாங்கமானது, மிகவும் மோசமான பலவீனத்தையே வெளிப்படுத்தி வருகின்றது.

# அவதார் திரைப்படம்

## ஒரு விமர்சனப் பார்வை

சொக்கலிங்கம் லோஜினி
*ஊடக கற்கைகள் துறை மூன்றாம் வருட மாணவி யாழ் பல்கலைக்கழகம்.*



"அவதார்" **(Avatar)** திரைப்படமானது 2009ஆம் ஆண்டு வெளியான ஒரு விஞ்ஞான கற்பனை திரைப்படமாகும். ஜேம்ஸ் கேமரூன் மற்றும் ஜான் இலாண்டாவ் ஆகியோர் தயாரிப்பில், ஜேம்ஸ் கேமரூன் என்பவர் இயக்கம் மற்றும் திரைக்கதையில், சாம் வோர்த்திங்டன், ஜோ சல்டனா, இசுடீபன் லாங், மிச்செல் ரோட்ரிக்வெஸ் மற்றும் சிகர்னி வேவர் போன்ற பலர் நடிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திரைப்படத்தை 20ஆம் சென்சுரி பாக்ஸ், லைட்ஸ்டாரம் என்டர்டெயின்மென்டு, ராட்பேக்-டூன் என்டர்டெயின்மென்ட் மற்றும் இங்கெனியசு மீடியா ஆகிய நிறுவனங்கள் தயாரிக்க, 20ஆம் சென்சுரி பாக்ஸ் என்ற நிறுவனம் மூலம் விநியோகம் செய்யப்பட்டது.

இதில், நாசா நாச்சுரியல் கோளில் உள்ள பாண்டோரா என்ற கிரகத்தில் மனிதர்கள் உருவாக்கிய "நவீ" என்ற உயிரினத்தைப் பற்றியே கதையானது நகர்ந்து செல்கிறது. மனிதர்கள் அந்த கிரகத்தின் வளங்களை தன்வசம் பெறுவதற்கான திட்டத்தைத் தொடங்கியவுடன், நவீ சமூகத்தின் எதிர்ப்பு எழுகிறது. உலக சினிமா வரலாற்றிலே முதல் திரைப்படமாகவும் இன்றும் இடம்பிடித்துள்ளது.

அவதாரின் வளர்ச்சி 1994 இல் தொடங்கியது. படத்திற்காக ஜேம்ஸ் கேமரூன் என்பவர் 80 பக்க கதையை எழுதினார். கேமரூனின் 1997 திரைப்படமான டைட்டானிக் முடிந்த பிறகு, 1999 இல் திட்டமிடப்பட்ட வெளியீட்டிற்காக படப்பிடிப்பு நடத்தப்பட வேண்டும். இருப்பினும், கேமரூனின் கூற்றுப்படி, திரைப்படத்தை உருவாக்குவதற்கு தேவையான தொழில்நுட்பம் இன்னும் கிடைக்கவில்லை ஆகும். அதை தொடர்ந்து 2005இல் நாவி மொழிக்கான பணிகள் தொடங்கப்பட்டது, மேலும் 2006ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திரைக்கதை மற்றும் கற்பனையான பிரபஞ்சம் உருவாக்கப்பட்டது. இந்த திரைப்படம் அதிகாரப்பூர்வமாக அமெரிக்கா டொலர் $237 மில்லியன் பொருள்செலவில் எடுக்கப்பட்டது.

அவதார் படம் டிசம்பர் 10, 2009ஆம் ஆண்டில் லண்டனில் திரையிடப்பட்டது, மேலும் டிசம்பர் 18 அன்று அமெரிக்காவில் வெளியிடப்பட்டு, நேர்மறையான விமர்சனங்களைப் பெற்றது, விமர்சகர்கள் அதன் அற்புதமான காட்சி விளைவுகளைப் பாராட்டினர்.

இந்த திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகிய போது பல வசூல் சாதனைகளை முறியடித்தது. மற்றும் அந்த நேரத்தில் அதிக வசூல் செய்த படமாகவும் ஆனது, அதே போல் அமெரிக்கா மற்றும் கனடாவில், பன்னிரண்டு ஆண்டுகளாக அந்த சாதனைகளை வைத்திருந்த கேமரூனின் டைட்டானிக்கை முறியடித்தது.

இது சிறந்த படம் மற்றும் சிறந்த இயக்குனர் உட்பட ஒன்பது அகடமி விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டது, மேலும் சிறந்த கலை இயக்கம், சிறந்த ஒளிப்பதிவு மற்றும் சிறந்த திரை வண்ணம் ஆகிய மூன்றையும் வென்றது.

திரைப்படத்தில் அற்புதமான விசுவல் ஈஃபெக்ட்ஸ் மற்றும் 3D தொழில்நுட்பத்துடன் சிறப்பாக பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது, இது ரசிகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. இப்படமானது பரம்பரை, சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார மோதல்களை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை வழங்குகிறது.

கேமிரோன் கதையில் சாதாரணமான காட்சி அளவீட்டுகளைத் தாண்டி, மெய்நிகரான உலகத்தை உருவாக்குவதற்கான தனது திறமையை வெளிப்படுத்துகிறார். "அவதார்" படம் பல பரிசுகளையும் விருதுகளையும் வென்றுள்ளது, முக்கியமாக ஆஸ்காரில் சிறந்த கலைப் படைப்பாகவும், சிறந்த தொழில்நுட்பம் மற்றும் சிறந்த ஒளிப்பதிவு எனவும் விருதினை பெற்றதும் பெருமைக்குறியது. இன்றும் ரசிகர்களால் வியந்து பேசப்படும் அட்டகாசமான திரைப்படமாக அவதார் ரசிகர் மனதில் ஆழ பதிந்துள்ளது.

அந்தக் காலத்தில், "அவதார்" திரைப்படம் மாபெரும் வரவேற்பைப் பெற்றது.மற்றும் உலகளாவிய அளவில் **box office** பிளாஸ்டர் ஆவதாகவும் இருந்தது. எத்தனை தடவை பார்த்தாலும் சலிப்புத் தட்டாத ஒரே படமாகும் முதல் தடவை பார்ப்பது போன்ற உணர்வையே எப்போதும் கொடுக்கும்.

இப்படத்தை விட சிறப்பான **3D Animation** யாராலையும் படைக்க முடியாது என்பதை ஜேம்ஸ் கேம்ரோன் நிரூபித்துள்ளார். 15 வருடத்திற்கு முன்பு வந்த திரைப்படம் இன்றும் நின்று பேசுகின்றது என்றால் மிகையல்ல. **visually stanning** படமாகும். திரையரங்குகளில் பார்க்கும் போதும் மேலும் அட்டகாசமாக இருக்கும். படத்துடன் சேர்ந்து நாமும் பயணிப்பது போல ஒரு எண்ணம் ஏற்படும் அளவிற்கு 3D தொழில்நுட்பம் சிறப்பாக கையாளப்பட்டுள்ளது. அவதார் திரைப்படத்தை 3D யில் பார்த்தால் தான் அதான் எபெக்ட் சிறப்பாக இருக்கும். காட்சி ரீதியாக இப்படத்தில் எவ்வித குறையும் கூற முடியாது. ஆனால் சிறிய சிறிய காட்சிகளில் அவதாரினை பார்க்கும் போது பொம்மையாக சித்தரிப்பதை காண முடிகிறது இருப்பினும் அது அக்காலத்தில் அந்த 3னு தொழில்நுட்பத்தன்மை அவ்வாறு இருந்திருக்கலாம் என்பதை அறியலாம்.

மேலும் இப்படத்தினை பற்றி கூறும்போது இப்படத்தில் பயன்பட்டுள்ள ஒளி, ஒலி அமைப்புகளைப் பற்றிக் கூறாமல் இருக்க முடியாது. இப்படத்தின் முக்காவாசிகளும் அந்த காட்டுவாசி மக்களை மையப்படுத்தி இருப்பதால் அதற்குப் பொருந்துமாறு பின்னணி இசைகள் வழங்கப்பட்டிருப்பதும் சிறப்பாக இருந்தது. **sound effects** அற்புதமாக இருக்கும் ஒரு சாதாரண மனிதனாக நம்மை காட்டுக்குள் அனுப்பினால் அந்த காட்டுக்குள் எவ்வாறான சத்தங்களை எம்மால் உணர முடியுமோ அந்த அளவிற்கு இப்படத்தில் சத்தத்தினை பயன்படுத்தி இருப்பது ரசிகர்களை வியக்க வைத்துள்ளது.

இந்தப் படத்தில் ஒவ்வொரு மிருகங்களையும் புதிதாக காண்பிக்கும் போது அதனை பார்க்கும் ரசிகர்களாக நாமே அந்த உலகத்துக்கு சென்று உணர்வதான ஒரு எண்ணத்தையும் இப்படம் தருகின்றது. மேலும் இப்படத்தில் உள்ள பிரட்டோகனிஸ்ட், அண்டகனிஸ்ட் பற்றியும் கூற வேண்டும் இப்படத்தில் வில்லன் கேரக்டர் என்பது ஒரு குறையாகவே காணப்படுகின்றது அதாவது பார்க்கும்போது வில்லனுக்கு இருக்கக்கூடிய தகுதிகள் மற்றும் அவரது நடிப்பு, தோற்றம் என்பது குறைவாக காட்டப்பட்டுள்ளது. மேலும் இப்படத்தில் கிரேஸ் என்ற விஞ்ஞானம் தெரிந்த கேரக்டரும் குறைவாகவே காட்டப்பட்டுள்ளது. படத்தின் இறுதியில் காட்டப்படும் சண்டைக் காட்சிகளில் சற்று வீரிய தன்மையைக் கூட்டி இருக்கலாம் என்பது எனது கருத்தாகும் சில இடங்களில் சண்டை காட்சிகளில் ஸ்லோ மோஷன் போட்டிருந்தது அதன் சிறப்பினை எடுத்துக்காட்ட வில்லை மேலும் இன்னும் ஒரு குழுவாக இணைந்து இருக்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. இப்படத்தில் முற்றும் முழுதாக ஜேக் என்ற கேரக்டரையே மையப்படுத்தி படம் முழுவதும் நகர்ந்து உள்ளது. மேலும் இப்படத்தில் உணர்வுகள் என்ற விடயம் சிறப்பாக காட்டப்பட்டது பார்வையாளர்களை கண்கலங்க வைக்கும் அளவுக்கு எமோஷனலாக இருந்தது. **love for nature** என்ற விடயத்தினை மையப் படுத்தி ஜேம்ஸ் கேமரூன் இப்படத்தினை நகர்த்தி உள்ளது சிறப்பாக இருந்தது. அடுத்து என்ன ஏற்படும் என்ற சுவார சியத்தை இப்படம் ஏற்படுத்தியுள்ளது.

மேலும் அவதார் பகுதி 01 படத்தின் இறுதியில் அவதார் பகுதி 02 தி வே ஆப் வாட்டர் டிசர் இணைத்துள்ளனர். இது நீருக்கடியில் நடக்கும் காட்சிகளாகும். இது பார்வையாளர்களின் ஆவலைஇ எதிர்பார்ப்பை தூண்டுவதாக உள்ளது. மேலும் இன்றும் என் மனதை விட்டு அழியாத காவியமாகவும் உள்ளது.

இந்த திரைப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, இயக்குனர் ஜேம்ஸ் கேமரூன் என்பவர் 20ஆம் சென்சுரி பாக்ஸ் உடன் இணைந்து நான்கு தொடர்ச்சியான படங்களை தயாரிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டார்: அவதார்: தி வே ஆப் வாட்டர் மற்றும் அவதார் 3 ஆகியவை முதன்மைப் படப்பிடிப்பை முடித்துவிட்டன, மேலும் அவை முறையே டிசம்பர் 16, 2022ஆம் ஆண்டு அவதார் 2 வெளிவந்தது. தொடர்ந்தும் டிசம்பர் 20, 2024 ஆகிய திகதிகளில் அடுத்த பகுதிகளில் வெளியிட திட்டமிட்டபடி இவ்வருடம் வெளிவரவுள்ளது. அடுத்தடுத்த தொடர்கள் டிசம்பர் 18, 2026 மற்றும் டிசம்பர் 22, 2028 ஆகிய தேதிகளில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.



# மன்னம்பெரிக்கு ஓர் நீதி !
# இசைப்பிரியாவுக்கு நீதியே இல்லையா?





## அநுரவின் புதிய அரசு நீதி வழங்குமா

- நவீனன்

நீண்டகால விசாரணைகளின் பின்னர் கதிர்காமத்தில் கொல்லப்பட்ட அழகுராணி மன்னம்பெரிக்கு நீதி வழங்கப்பட்டது. அவரைக் கொன்ற படையினர் விசாரிக்கப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டது. ஆனால் இளம் தமிழ் ஊடகர் இசைப்பிரியாவை கொன்றவர்கள் ஒருபோதும் விசாரிக்கப்படவும் இல்லை. தண்டிக்கப்படவும் இல்லை. எதிர் காலத்தில் தண்டிக்கப்படவும் சாத்தியமில்லை என்றே பதவிக்கு வந்த புதிய ஜனாதிபதி அநுர திசநாயக்கா திட்டவட்டமாக தேர்தலுக்கு முன்பாக தெரிவித்து விட்டார்.

போர்க்குற்றங்கள் விசாரிக்கப்படாது ?

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் விசாரிக்கப்படாது என்று தெளிவாகவே அவர் தேர்தலுக்கு முன்பாக தெரிவித்து விட்டார்.

ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்ட இசைப்பிரியாவுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை. இலங்கை அரசு ஒருபோதும் நீதி வழங்கப்போவதும் இல்லை என்பது தமிழர்க்கு மட்டுமின்றி சர்வதேசத்திற்கும் தெரியும்.

இசைப்பிரியா தமிழ் இனத்தைச் சேர்ந்த இளம் ஊடகர். மற்றயவர் சிங்கள இனத்தைச் சேர்ந்த அழகுராணியான மன்னம்பெரி. இருவரும் கொல்லப்படும் போது இளம் பெண்கள். இருவரும் இலங்கை தீவில் உள்ள ஈழத்திலும் - சிறிலங்காவிலும் பிறந்தவர்கள்.

கதிர்காமத்தின் அழகி பிரேமாவதி மன்னம்பெரி என்ற பெண்ணை இலங்கை இராணுவம் நிர்வாணம் ஆக்கி வீதி வழியே இழுத்து வந்து ஏப்ரல் 16,1971 அன்று தெருவில் வைத்து துப்பாக்கியினால் சுட்டு கொலை செய்தது.

இசைப்பிரியா ஈழப்போராட்டத்தில் இளம் ஊடகராக பணியாற்றியவர். மௌனிக்கப்பட்ட ஈழப்போரின் இறுதியில் 2009 மேயில் சரணடைந்த பின்பு அரச படையால் கொடூரமாக கொல்லப்பட்டார்.

நிராயுதபாணியாக இருந்த பல பெண்களை பயங்கரவாதிகள் என்றும் அவர்களை கொல்வது நியாயமே என்று சிங்கள அரசு இன்றும் வாதிடுகிறது. ஆயினும் பாலியல் வல்லுறவு செய்து கொன்ற, கொடுஞ் செயலை கட்டுப்பாடற்ற சிங்கள படையினரின், அநாகரிக செயலை சர்வதேசத்திற்கு தெளிவாக வெளிக்காட்டியது.

மன்னம்பெரி - இசைப்பிரியா இருவரும் அரச படைகளால் பாலியல் வல்லறவு செய்யப்பட்டே கொல்லப்பட்டனர். இரு பெண்களும் பயங்கரவாதிகள் என கூறப்பட்டே கொல்லப்பட்டனர். ஆயினும் சர்வதேச அழுத்தங்களால் போர்க்குற்றங்களுக்கு விசாரித்து தண்டனை வழங்குவோம் என்றார்கள். இதுவரை எத்தகைய நீதியும் வழங்கப்படவில்லை என்பது சர்வதேசத்திற்கே தெரியும்.

மன்னம்பெரியின் கொடூர கொலை!

1971 ஏப்ரலில் தென்னிலங்கையில் இடம்பெற்ற ஜேவிபி (துஜீ) கிளர்ச்சியின் போது, கதிர்காமம் முக்கிய நகரமாக செயற்பட்டது. மன்னம்பெரி மக்கள் விடுதலை முன்னணியில் இணைந்து, அவ்வியக்கத்திற்கு சீருடைகள் தைத்துக் கொடுத்து உதவி செய்து வந்தார்.

ஏப்ரல் 16 இல் இலங்கை அரச படை இக்கிளர்ச்சியை அடக்கி, நகரை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. சிங்கள இளைஞர்கள் பலர் காட்டினுள் தப்பி ஓடினர். மன்னம்பெரி உட்பட சில பெண்கள் போராளிகளுக்கு உதவி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

சிங்கள இராணுவத் தினரால் கைது செய்யப்பட்ட அவர் இரவு முழுவதும் பாலியல் வன்முறைக் குட்படுத்தப்பட்டு சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டார்.

பின்னர் அவரை நிர்வாணமாக்கிய இராணுவத்தினர் கதிர்காமம் புனித நகரின் வீதிகளில் நிர்வாணமாக இழுத்து வந்து,பொது மக்கள் முன்னிலையில் துன்புறுத்தப்பட்டு, அஞ்சலகம் ஒன்றின் முன்னால் அவரை சுட்டு தீ வைத்து விட்டு அகன்றனர். பின்னர் மீண்டும் திரும்பி வந்து சுட்டுக் கொன்றனர். மன்னம்பேரி இறுதியில் தலையில் சூட்டுக் காயம்பட்டு இறந்தார்.

மன்னம்பெரியைக் கொலை செய்த குற்றத்திற்காக லெப்டினண்ட் ஏ. விஜயசூரிய, அமரதாச இரத்திநாயக்கா இருவரும் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இருவருக்கும் 16 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டில் லெப்டினண்ட் விஜயசூரியா மாத்தறையில் வைத்து மக்கள் விடுதலை முன்னணியினரால் கொல்லப்பட்டார்.

கதிர்காம வீதியில் குற்றுருயிராக துடித்த மன்னம்பெரியை எரியூட்டிக் கொலை செய்தமைக்கு, சிங்கள அரசை சொந்த மக்களே குற்றஞ்சாட்டினர்.

சிங்கள் மக்கள் ஏன் முழு இலங்கை மக்கள் மனதில் இன்றுவரை இலங்கை ஆளும் வர்க்க இராணுவத்தின் இந்த மிலேச்சத்தனமான எரியூட்டல் கொலை வரலாற்று அவலமாக பதிந்து அழிந்து போகாமல் இருக்கின்றது.

**தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள இடதுசாரி முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு நீதியை வழங்குமா என்பது கேள்விக்குறியே? மன்னம்பெரிக்கு ஓர் நீதியும், இசைபிரியாவுக்கு நீதியே இல்லையா என்பது இனவாதத்தின் அடிப்படைக் காரணங்களாகவே அமைகின்றன**



நீதி மறுக்கப்பட்ட தமிழப்பெண்கள்:

ஈழப்போரில் முள்ளிவாய்கால் இறுதி யுத்தத்தில் இசைப்பிரியா போன்ற பெண்களின் உடைகள் களையப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்ட போது அந்த கொலைஞர்கள் கூட்டத்தில் இருந்த ஒரு கமரா மாத்திரம் அதனை புகைப்படம் எடுத்து அந்த அவலத்தை உலகத்தின் கண்களுக்கு கொண்டு சென்றது.

கொடூரமான இந்த கொலைகள் அவமானங்கள் துயில் உரிதல்கள் நடைபெற்ற போது, அங்கும் சுற்றி நின்ற இராணுவத்தினர் தங்களின் சக பிறப்புக்களான தாயும் சகோதரியும் பிள்ளைகளும் என்றோ இவர்களும் பெண்கள் என்று இதனைப் பார்க்காது, மனித குலம் வெட்கித் தலை குனியும் செயற்பாடுகளையே செய்தனர்.

இதன் மூலம் அந்த மனிதாபிமானமற்ற சிங்கள அரசின் கொலைகள் உலகிற்கு அம்மணமாக்கப்பட்டது. ஆனால் அந்தப் புகைப்பட ஆவணம்தான் இலங்கை இராணுவம் மிகக் கீழ் தரமான இராணுவம் என்று மீண்டும் உலகிற்கு அடையாளப்படுத்தப்பட்டது.

இது போன்ற மனித அரக்க குணங்கள் சிங்கள நாட்டின் தேசியத்தின் பெயரால், மதத்தின் பெயரால், நாட்டுப் பற்றாளர் என்ற பெயரால் அவ்வப் போது தமக்கு வசதியான விடயங்களை முன்னிறுத்தி நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது. உலகின் பல மூலைகளிலும் மனித குலமும் இதனைத் தடுத்து நிறுவதற்கான போராட்டங்களை நடாத்திக் கொண்டுதான் இருக்கின்றது. சர்வதேசம் கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும் முள்ளிவாய்க்காலில் நடந்தது வெறும் போர்க்குற்றம் இல்லை. அது பாரிய இனப்படுகொலையே.

இந்த உண்மையை ஏன் உலகம் இன்னமும் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது? தமிழ்ப் பெண்களுக்கு நீதி கிடைக்க சர்வதேச ரீதியில் குரல் கொடுக்கப்பட வேண்டும். தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள இடதுசாரி முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு நீதியை வழங்குமா என்பது கேள்விக்குறியே ?

மன்னம்பெரிக்கு ஓர் நீதியும், இசைபிரியாவுக்கு நீதியே இல்லையா என்பது இனவாதத்தின் அடிப்படைக் காரணங்களாகவே அமைகின்றன.



அ. கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලැර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |






இப்பத்திரிகை 26.09.2024 அன்று இல.12/1 செங்குந்த அங்காடி, பருத்தித்துறை வீதி, யாழ் / நல்லூர் பணிமனையில் உள்ள அகரவ் பப்ளிசிங் மீடியா பிறிண்டிங் ஹவுஸ் (பிறைவேற் லிமிட்ரெட்) நிறுவனத்தினரால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.